ISSN 1391-9504




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூச்சியுண்ணும் தாவரங்கள்



தாவரங்கள் பொதுவாக தமக்குத் தேவையான உணவைத் தாமே உற்பத்தி செய்துகொள்ளும் இயல்புடையவை. இதற்கான அமைப்பு அவற்றில் உண்டு. தாவரங்கள் 'காபனீரொட்சைட்' வாயுவைப் பயன்படுத்தி, சூரிய ஒளியின் மூலம் உணவு உற்பத்தியை செய்யும். இதற்குத் தாவரங்களுக்கு நன்கு வளர்ச்சியடைந்த வேர், இலை என்பன தேவைப்படுகின்றன. இவ்வாறான உணவுற்பத்தியை 'ஒளிச் சேர்க்கை' என்பர்.



ஒளிச்சேர்க்கைக்கு ஆதாரமான 'பச்சையமும்' இலைகளில்தான் இருக்கிறது. தேவையான நீரை வேர்கள் உறிஞ்சிக் கொடுக்கின்றன. தாதுப் பொருட்களையும் இவை பூமியிலிருந்து உறிஞ்சிக் கொடுக்கும். எனவே, தாவரங்கள் தமது உணவுத் தேவைக்கு பூச்சிகளை நாடத் தேவையில்லை என்று தானே தோன்றுகிறது? அது தவறு, சில தாவரங்களின் வேர்கள் மிகவும் பல வீனமானவை. இவ்வாறான தாவரங்கள் தமக்குத் தேவையான தாதுப் பொருட்களை பூச்சிகளைப் பிடித்து உண்பதன் மூலமே பெற்றுக் கொள்கின்றன. இவ்வாறான செயற்பாட்டை நிகழ்த்துவதற்கு இத்தாவரங்கள் இசைவாக்கம் அடைந்துள்ளன.

அவ்வாறான தாவரங்களுள் Cobra Plant என்னும் தாவரமும் ஒன்றாகும். இது நாகபாம்பு படமெடுப்பதைப் போன்ற தோற்றம் கொண்டதாகும். இதில் Pitcher plant என்றொரு வகையும் உண்டு. இந்த இரண்டு தாவரங்களிலும் 'வீழ்குழிப் பொறிகள்' உண்டு. இச்செடிகளின் இலைகள் மலர்களைப் போன்ற உருவ அமைப்பிலும் கவர்ச்சியான நிறங்களிலும் இருக்கும். அதேவேளை, இத்தாவரத்தின் பூக்கள் தேனையும் சுரக்கும். இதனால், கவரப்படும் தேனீக்கள், குளவிகள், வண்டுகள் மற்றும் ஈக்கள் போன்றன இச்செடியின் இலைகளில் உட்காரும்போது வீழ்குழிப் பொறிகளில் வீழ்ந்துவிடுகின்றன. இதில் இருந்து தப்பும் முயற்சியில் பூச்சிகள் களைத்துப் போய் மயங்கி விட செடிகள் அப்பூச்சிகள் மீது சமிபாட்டு நொதியங்களைச் சுரந்து அவற்றின் உடலை சுவை பார்த்து விடும்.

இவ்வாறான தாவரங்களில் Sundews, Butter worts என்பனவும் அடங்கும். பூச்சிகளை உண்ணும் செடிகளில் மிகவும் முக்கியமானது Venus fly-trap தான். இதன் இலைகள் இரண்டு அரைவட்ட வடிவில் இருக்கும். இலைப் பரப்புகளின் விளிம்புகளில் முடி நீட்சிகள் இருக்கும். இதனால், கவரப்பட்ட பூச்சிகள் இலைப்பரப்புக்களில் உட்கார்ந்தவுடன் அரைவட்ட இலைப்பரப்புத் தூண்டப்பட்டு அப்படியே மேலெழுந்து மூடியைப் போல் அரைவட்ட இலைப்பரப்பை மூடிக் கொள்ளும். அரைவட்ட இலைப்பரப்பில் உள்ள சுரப்பிகள் சமிபாட்டு நொதியங்களைச் சுரந்து பூச்சிகளின் உடலை உண்டுவிடும்.


**யு.எச்.எம்.ஸிபான்**



## புராதன காலத்து நெக்லஸ்

புராதன காலத்து தங்க நெக்லஸ் ஒன்றை பெருநாட்டு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அகழ்ந்தெடுத்துள்ளனர். அமெரிக்காவில் செய்யப்பட்ட உலகின் மிகப் பழைமையான தங்க ஆபரணம் இதுவென்று நம்பப்படுகின்றது.

இந்த நெக்லஸ் பெருவில் உள்ள குளமொன்றுக்கு அருகில் புதைகுழியொன்றில் மனித எலும்புக்கூடு ஒன்றின் தாடைப்பகுதிக்கு அருகில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



இந்தப் புராதன புதைகுழிகளுக்கு அருகில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் இருந்து இது சுமார் 4,000 வருடங்கள் பழைமைமிக்கது என்று தெரியவந்துள்ளது. புராதன காலத்திலேயே மக்கள் தங்க ஆபரணங்கள் அணிந்துள்ளனர் என்றும் இதிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த நெக்லஸ் தங்கக் கட்டியை கல் சுத்தியலால் அடித்து தட்டையாக்கி பின்னர் மிகக் கவனமாக குழாய் வடிவில் வளைத்து உருவாக்கி இருப்பதாகவும் தெரிகிறது.

இந்தக் கண்டுபிடிப்பானது மிகுந்த வியப்புக்குரிய ஒன்று என்று 'அரிஷோனா' பல்கலைக்கழக மனித சாஸ்திர வல்லுனரான மார்க் ஒல்டென்டொர்பர் கூறியுள்ளார்.

## உயிர் பெறக் காத்திருக்கும் மனித உடல்கள்

எதிர்காலத்தில், அதாவது இன்னும் ஐம்பது, நூறு ஆண்டுகளில் அறிவியல் நுட்பத்தின் வளர்ச்சியால் இறந்தவர்களைத் திரும்பவும் உயிர்ப்பிக்க முடியும் என்று சிலர் நம்புகின்றார்கள். அதன் அடிப்படையில் இறந்தவர்கள் சிலரின் உடல்கள் பாதுகாத்தும் வைக்கப்படுகின்றன. இதற்கு 'க்ரையோனிக்ஸ்' என்ற தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. இதன் படி, இறந்தவர்களின் உடல்களை உயரமான, பிளாஸ்டிக் போன்ற கொள்கலனில் 'திரவ நைட்ரஜ



னில் வைத்துப் பாதுகாக்கிறார்கள். கொள்கலனின் வெப்பநிலை, 'மைனஸ் 196 டிகிரி செல்சியஸ்' என்ற அளவில் நிலையாக வைத்திருக்கப்படுகிறது. இன்னும் சிலர், தங்கள் தலையை மட்டும் பாதுகாத்தால் போதும் என்று கூறிவிட்டு இறந்திருக்கிறார்கள். அதன்படி அவர்களின் தலை மட்டும் 'விட்ரிபிகேஷன்' என்ற தொழில்நுட்பத்தின் மூலம் பாதுகாக்கப்படுகிறது. இத்தொழில்நுட்பத்தில், மூளையானது கண்ணாடி போல கடினமாக்கப்படுகிறது.

1965 ஆம் ஆண்டு 'நியூயோர்க் க்ரையோனிக்ஸ் கழகத்தை' நிறுவிய கார்ல் வெர்னர் என்பவர்தான் 'க்ரையோனிக்ஸ்' என்ற வார்த்தையை உருவாக்கினார்.

'க்ரையோனிக்ஸ்' முறைப்படி 1967 ஆம் ஆண்டு முதன்முதலாகப் பாதுகாக்கப்பட்ட உடல், அமெரிக்காவைச் சேர்ந்த மருத்துவர் ஜேம்ஸ் பெட்போர்ட் என்பவருடையது ஆகும்.

அப்போது இதற்கு செலவான தொகை ஏறக்குறைய 75 லட்சம் ரூபா. அதன்பின், அமெரிக்காவில் 150 பேரின் உடல்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் புகழ்பெற்ற பேஸ்பால் வீரர் டெட் வில்லியம்ஸின் உடலும் அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சா/தர மீளாய்வு விண்ணப்பங்கள் ஏப்ரல் 30 வரை ஏற்றுக்கொள்ளப்படும்

கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த சா/தர பரீட்சை மீளாய்வு விண்ணப்பங்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கும்படி பரீட்சை ஆணையாளர் நாயகம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இம்மாத ஆரம்பத்தில் சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டன.

எனினும், இதுவரை பரீட்சை முடிவுகள் கிடைக்காதவர்கள் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும்படியும் அதேவேளை, பரீட்சை நடைபெறும்போது பரீட்சை ஒழுங்கு விதிகளை மீறியவர்களின் பெறுபேறுகள் இதுவரை வெளியிடப்படவில்லையென்றும் அது குறித்து விரைவில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

பாடசாலைப் பரீட்சார்த்திகள் அதிபரின் உறுதிப்படுத்தலுடன் பாடசாலையூடாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தனியாகவும் தமது மீள் பரிசீலனைக்கான விண்ணப்பங்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் 30 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் எந்தவொரு விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## இவ்வாண்டிலிருந்து மாணவர்களுக்கு புதிய அடையாள அட்டை விநியோகம்

மாணவர்கள் எதிர்கொள்ளும் பல அசௌகரியங்களைத் தீர்க்கும் நோக்கிலும் மாணவர்கள் என்பதை உறுதிப்படுத்தும் நோக்கிலும் நாடு பூராகவுமுள்ள 35 லட்சம் பாடசாலை மாணவர்களுக்கு புதிய அடையாள அட்டைகளை வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதனூடாக, மாணவர்களுக்குப் பல வழிகளிலும் உதவிகளை வழங்கக்கூடியதாக இருக்கும் எனக் கல்வியமைச்சு மேலும் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

பாடசாலை இலக்கம் மற்றும் மாணவரின் சேர்விலக்கத்தையும் உள்ளடக்கி இப்புதிய அடையாள அட்டைகள் தயாரிக்கப்படவுள்ளதோடு தேசிய மட்டத்திலான புதிய அடையாள இலக்கத்தை வழங்குவதற்கான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.


விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
பெக்ஸ்: 2479688

## நாடளாவிய ரீதியில் ஆங்கில மொழித்தினப் போட்டிகள்

நாடளாவிய ரீதியில் ஆங்கில மொழித்தினப் போட்டிகளை நடாத்த கல்வியமைச்சின் ஆங்கிலப் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் கோட்ட மட்டப் போட்டிகளை மே 30 ஆம் திகதிக்கு முன்னரும் மாவட்ட மட்டப் போட்டிகளை ஜூலை 11 ஆம் திகதிக்கு முன்னரும் மாகாண மட்டப்போட்டிகளை ஒக்டோபர் 17,18 ஆம் திகதிகளிலும் நடத்தி முடிக்குமாறும் பாடசாலை அதிபர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மாகாண மட்டப் போட்டிக்கான விண்ணப்பங்கள் ஜூலை 31 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



## பாடசாலைகளில் கைத்தொலைபேசிகள் பயன்படுத்தத் தடை

பாடசாலை நடைபெறும் நேரங்களில் மாணவர்கள் கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்துவதை தடைசெய்யுமாறு பாடசாலை அதிபர்களிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாணவர்கள் பாடசாலை நடைபெறும் வேளைகளில் கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்துவதனால் பல்வேறு துஷ்பிரயோகங்கள் நடைபெறுவதாக சிறுவர்-பெண்கள் பாதுகாப்புப் பிரிவுக்குக் கிடைத்த முறைப்பாடுகளையடுத்தே பொலிஸார் இக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

பாடசாலைகளில் மாணவர்கள் கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்தி தங்களுக்கிடையே தகாத வார்த்தைகளில் உரையாடுவதாகவும் குறுந்தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்படுவதாகவும் தெரியவந்துள்ளது. மேலும் சில மாணவர்கள் அதிலுள்ள புகைப்படக் கருவியால் மாணவர்களையும் ஆசிரியைகளையும் படமெடுத்து அதனைத் தவறான வழிமுறைகளில் பயன்படுத்துவதாகவும் இதுகுறித்து, சிறுவர்-பெண்கள் பொலிஸ் பாதுகாப்புப் பிரிவுக்கு பல முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பாக, மாணவர்களின் பெற்றோர்களை அறிவுறுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

க.பொ.த (சா/தர) பரீட்சை பெறுபேறு;

## வெள்ளவத்தை இராமகிருஷ்ண வித்தியாலய மாணவி ரேகாவிற்கே 8 ஆம் இடம்

**'விஜய்' கடந்த வார இதழில் க.பொ.த சா/தர பரீட்சைப் பெறுபேறுகளில் தமிழ்மொழி மூலம் அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள் வழங்கப்பட்டதில், 8 ஆம் இடத்தைப் பெற்ற ரேகா பாலசுப்ரமணியம் என்ற மாணவியினது பாடசாலையின் பெயர் பம்பலப்பிட்டி, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி என்று தவறாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அவர் வெள்ளவத்தை இராமகிருஷ்ண வித்தியாலய மாணவி என்பதை அறியத்தருகின்றோம். மேற்படி தவறுக்காக வருந்துகின்றோம்.**

**குறித்த மாணவி கல்வி கற்கின்ற வெள்ளவத்தை இராமகிருஷ்ண வித்தியாலயமானது போதிய வசதி வாய்ப்புக்களற்ற ஒரு பின்தங்கிய பாடசாலையாகும்.**

**1924 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி வெள்ளவத்தை சுவர்ணா வீதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த பாடசாலை பின்னர் 1960 ஆம் ஆண்டு தற்போதுள்ள இடத்திற்கு இடம் மாற்றப்பட்டு ஒரே ஒரு கட்டடத்துடனேயே இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 11 வரை வகுப்புக்களைக் கொண்ட கலவன் பாடசாலையான இங்கு 350 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.**

**இத்தகைய பின்னணியைக் கொண்ட பாடசாலையிலிருந்து ரேகா பாலசுப்ரமணியம் என்ற மாணவி சாதாரண தர பரீட்சை பெறுபேற்றில் முன்னிலை பெற்றுள்ளமை மிகவும் பாராட்டத்தக்கதே.**

விஜய் - ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் இணைந்து வழங்கும்
தாயக்கட்டையைக் கொண்டு விளையாடும்
'லூடோ'
வெவ்வேறு அட்டைகளை இந்த இதழுடனும், அடுத்துவரும் 23ஆம், 30ஆம் திகதி இதழ்களிலும் பெற்றுக் கொள்ளுங்கள்.

இன்றே உங்கள் பிரதியை பதிவு செய்து கொள்ளுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகுக்கு ஒளிகொடுத்த மேதை

உலகம் இன்று விளக்குகளால் ஜெகஜோதியாகப் பிரகாசிக்கின்றது என்றால் அதற்கு மூலகாரணம் தோமஸ் அல்வா எடிசன் (1847-1931) என்னும் அறிவியல் மேதைதான்.

தோமஸ் அல்வா எடிசன் அமெரிக்காவிலுள்ள ஒஹியோ மாநிலத்தில் மிலான் என்னும் இடத்தில் 1847 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 ஆம் திகதி ஓர் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார். அமெரிக்கா நாட்டில் குடியேறிய டச்சுக்காரரின் பரம்பரையில் வந்தவர் எடிசனின் தந்தையார். தாயாரோ ஸ்கொட்லாண்டுக்கார பரம்பரையைச் சேர்ந்தவர்.

ஏழ்மை நிலை காரணமாக எடிசனை முறையாக பாடசாலைக்கு அனுப்ப இயலவில்லை. இதனால், இவரின் பாடசாலைக் கல்வி மூன்றே மாதங்களுடன் முடிந்துவிட்டது. அவரின் தாயார் ஓரளவு கல்வி கற்றவரானபடியால் எடிசனுக்கு வீட்டிலேயே வைத்து கல்வி போதித்தார்.



தனது எட்டு வயது முதலே வேதியல் (இரசாயனம்) துறையில் ஆர்வமும் நாட்டமும் செலுத்தினார் எடிசன். அதனால், அந்தச் சின்னஞ்சிறு வயதிலேயே தன் வீட்டில் ஓர் ஆய்வு கூடத்தை அமைத்துக் கொண்டார். மனித வளர்ச்சிக்கு உதவும் புதிய கண்டுபிடிப்புகளைக் கண்டறிந்து உலகுக்கு வழங்க வேண்டுமென்னும் துடிப்பு மிக்க எண்ணம் அந்த வயதிலேயே அவருக்கு ஏற்பட்டது.

தனது 14 ஆவது வயதில் ரயிலில் பத்திரிகைகள் விற்று அதில் கிடைக்கும் சிறு தொகையில் ஆய்வுக்கு வேண்டிய பொருள்கள் வாங்கி ஆராய்ச்சியை தொடர்ந்தார். இவரது ஆராய்ச்சிக்கு பொருளாதாரம் முட்டுக்கட்டையாக இருந்தது.

தனது 20 ஆவது வயதில் பல் ஊர்களுக்கு ஒரே தடவையில் தந்தி அனுப்பும் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். அப்போதெல்லாம் ஒருவருக்குத் தந்தி அனுப்ப வேண்டுமானால், ஒரு தடவையில் ஒருவருக்குத்தான் அனுப்ப இயலும். பல ஊர்களுக்கு, பல பேர்களுக்கு ஒரே சமயத்தில் தந்தி அனுப்ப இயலாது. பல நாள் ஆராய்ச்சியின் பயனால் அந்த விஷயத்தில் இவருக்கு வெற்றி கிட்டியது.

அந்தச் சமயத்தில் வேறு ஒரு செல்வந்தர் அவருக்கு உதவி செய்ய முன் வந்தார். அவர் கண்டுபிடித்த தந்திக் கருவிக்காக அவருக்கு நாற்பதாயிரம் டொலர்களை உதவித்தொகையாக வழங்கி அவரை ஊக்கப்படுத்தினார். இது எடிசனுக்கு ஆச்சரியத்தை கொடுத்ததோடு, மன வலிமையையும் தந்தது. தனது ஆராய்ச்சிக்காக அத்தொகையை பயன்படுத்தி, பெரிய ஆய்வுக்கூடத்தை நிறுவினார்.

மின் வாக்குப்பதிவு சாதனம், மோனோ கிராம் என்னும் கிராமபோன் (இசைத்தட்டு மூலம் பாடும் கருவி), ஒலிப்பதிவுக் கருவி என்று பலவற்றை கண்டுபிடித்தார்.

இவரின் கண்டுபிடிப்புகளில் மிகவும் முக்கியமானதாக ஒன்றைச் சொல்ல வேண்டுமானால் அது 'மின் விளக்கு'தான். இந்த அரிய கண்டுபிடிப்பை 1879 இல் உலகுக்கு வெளியிட்டார் எடிசன். இக்கண்டுபிடிப்பைத் தொடர்ந்து மூன்றே ஆண்டுகளில் நியூயோர்க் நகரம் முழுவதும் ஒளிமயமாகியது. இன்று நம்மையெல்லாம் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தும் பேசும் படம், இவரால் கண்டுபிடிக்கப்பட்டதே. இதற்கு முன் பேசும்படம் (ஊமைப் படம்) மட்டுமே இருந்து வந்தது. அந்த நிலையை மாற்றிப் பேசும் படமாக மாற்றியமைத்தவர் எடிசன், பேசும் படக் கெமராவும், புரொஜக்டரும் அவர் கண்டு பிடித்தவையே. மின் சுவிட்சுகள், மின் இணைப்பைக் காக்கும் பசை நாடாக்கள், மின் தூண்டல் முறையில் கம்பியில்லாத் தந்தி, காந்தச் சக்தியினால் தாதுக்களைப் பிரித்தெடுக்கும் முறை போன்றவற்றைக் கண்டுபிடித்தவரும் எடிசனே.

மனித இனத்திற்கு உதவும் 1300க்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புகளை தனது விடாமுயற்சியாலும், கடின உழைப்பாலும் கண்டறிந்த விஞ்ஞான வித்தகரான எடிசன் 1931 ஆம் ஆண்டு ஒக்டோபர் 18 ஆம் நாள் காலமானார். இவர் இறந்த அன்று இவருக்கு அஞ்சலி செலுத்தும் பொருட்டு ஒரு நிமிடம் அமெரிக்கா முழுவதும் இருட்டுப் படலத்தில் ஆழ்ந்தது.



# சனத்தொகை அதிகரிப்பின் தாக்கம் என்ன?

நாம் ஒன்றிலிருந்து பத்து வரை எண்ணி முடிக்கும் முன் உலகம் முழுவதும் 40க்கும் மேற்பட்ட குழந்தைகள் பிறக்கின்றன. ஒரு நிமிடத்துக்கு சுமார் 245 குழந்தைகள் பிறக்கின்றன.

தற்போதைய உலக சனத்தொகை 700 கோடிக்கும் மேலாகும். இந்தத் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கடந்த 250 ஆண்டு காலத்தில் உலக சனத்தொகை 500 கோடிக்கும் மேல் அதிகரித்துள்ளது.

2050 ஆம் ஆண்டளவில் உலக சனத்தொகை 900 கோடியை நெருங்கிவிடும் என்று வல்லுனர்கள் கூறுகின்றனர். இப்படி அதிகளவு சனத்தொகை அதிகரிப்பானது தீய விளைவுகளையே ஏற்படுத்தும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். அதிகளவு சனத்தொகை அதிகரிப்பானது சுற்றாடலைப் பாதிக்கச் செய்யும் என்றும், ஏழை மக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும் என்றும் சிலர் நினைப்பதாக 'நியூ ஜெர்ஸி பிரின்ஸ்டன்' பல்கலைக்கழக சனத்தொகை வல்லுனர் நொரீன் கோல்ட்மென் கூறினார்.

அதிகளவிலான மக்களால் தூய்மை பாதிக்கப்படுமென்றும் இயற்கை வளங்களான நிலம் மற்றும் நீர் என்பன உபயோக்கப்படுமென்றும் இதன் காரணமாகவே சூழல் பாதிக்கப்படுமென்றும் கூறுகின்றனர். எனினும், சனத்தொகை அதிகரிப்பானது எல்லா வகையிலும் தீயதாக இருக்குமென்று எல்லோரும் நினைக்கவில்லை. அதிகளவு சனத்தொகை அதிகரிப்பினால் இத்தகைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஆலோசனைகள் பெறும் வாய்ப்பும் ஏற்பட இடமுண்டு என்றும் சில வல்லுனர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

## சனத்தொகை விபரம்

உலக சனத்தொகை 1999 இல் 600 கோடியை நெருங்கி இருந்தது. உலக சனத்தொகையின் அதிகமான அதிகரிப்பு கடந்த 100 ஆண்டுகளிலேயே இடம்பெற்றுள்ளது.

கிராமப்புற மக்களை விட நகர்ப்புற மக்கள் மத்தியிலேயே கூடிய சனத்தொகை அதிகரிப்பு இடம்பெறுகிறது. உலகில் சனத்தொகை அதிகமுள்ள நகரம் ஜப்பான் தலைநகர் டோக்கியோவாகும். இங்கு மூன்று கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர். உலகின் சனத்தொகை கூடிய நாடு சீனா. மிகச் சிறிய நகரம் வத்திக்கான் இத்தாலியிலுள்ளது இந்நகரம்.

## தோலினால் சுவாசிக்கும் சுவாசப்பை இல்லாத தவளை

சுவாசப்பை இல்லாமல் தோலினால் சுவாசிக்கும் தவளையொன்றை இந்தோனேஷியாவின் போர்னியோ தீவில் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக தலைமை ஆய்வாளர் உயிரியலாளர் டேவிட் பிக்போர்ட் இதுபற்றித் தெரிவிக்கையில் இந்தத் தவளை வியக்கத்தக்க



வகையில் முழுவதுமாக தோலினாலேயே சுவாசிக்கும் வல்லமையைக் கொண்டிருக்கிறது'' என்று கூறினார்.

மிகச்சிறிய அளவிலான இந்தத் தவளை 40mm க்கு குறைவானதாகவும் 6.5 கிராம் எடையுள்ளதாகவும் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தத் தவளை குளிர்ந்த நீரோட்டத்தில் வாழ்கிறது. இதற்குத் தேவையான எல்லாப் பிராணவாயுவையும் இது தோலின் மூலமே பெறுகிறது என்றும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ந்து கண்டுபிடிக்கப்படுகின்ற சூரியத்தொகுதிகள்



தொலைவில் காணப்படும் நட்சத்திரமொன்றைச் சுற்றிக் கொண்டிருக்கும் கிரகங்களின் தொகுதியொன்றை விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்த சூரியத் தொகுதியானது, எமது சூரியத்தொகுதி போன்ற கட்டமைப்பைக் கொண்டதாக இருப்பதாகவும் ஆராய்ச்சியாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

எமது சூரியனின் அளவிலும் பார்க்க அரைவாசிப் பருமனுடைய நட்சத்திரமொன்றைச் சுற்றிக் கொண்டிருக்கும் வகையில் வியாழன் மற்றும் சனிக் கிரகங்களின் இயல்பை ஒத்த இரு கிரகங்கள் காணப்படுவதையும் அவர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதுவரையில் எமது சூரியத் தொகுதிக்கு அப்பால் சுமார் 300 கிரகங்கள் வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இப்படிக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சூரியத்தொகுதியானது, எமது சூரியத்தொகுதியின் அனைத்து இயல்புகளையும் கொண்டிருக்க வாய்ப்புள்ளது என நம்பிக்கை வெளியிடப்படுகிறது.




புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கிரகங்களின் தொகுதியானது, OGLE-2006-BLG-109L எனும் நட்சத்திரத்தை சுற்றி வலம் வந்து கொண்டிருக்கும் அதேவேளை, எமது சூரியத்தொகுதியிலிருந்து சுமார் ஐயாயிரம் ஒளியாண்டுகள் தொலைவில் தனது இருப்பைக் கொண்டுள்ளது.

கண்டுபிடிக்கப்பட்ட கிரகங்களின் தொகுதிக் கூறுகளில் உயிர் வாழ்வதற்குச் சாத்தியமான நிலைகள் காணப்படுகின்றனவா என்பதைக் கண்டறிவதே தமது அடுத்த இலக்கு என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். தொழில்நுட்ப வளர்ச்சி நாளாந்தம் அசுர வேகத்தில் நிகழ்ந்து கொண்டிருப்பதால் இதனைக் கண்டறிவது அவ்வளவு கடினமான காரியமாக அமையாது என விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் மேலும் நம்பிக்கை வெளியிடுகின்றனர்.

## சூரியன் காரணமில்லையாம்!!

அண்மைக்காலமாக காலநிலையில் ஏற்பட்டுள்ள அசாதாரண மாற்றங்களுக்கு சூரியனின் செயற்பாடுகள் காரணமாக அமையாது என ஆராய்ச்சியாளர்கள் மிகத் தெளிவான ஆதாரங்களைக் கண்டறிந்துள்ளனர்.

சூரியனிலிருந்து பூமி நோக்கி வரும் வெப்பக்கதிர்கள், மேகக் கூட்டங்களை அதிகரிக்கச் செய்தல், புவி வெப்பநிலையைக் கூட்டுதல் ஆகியன தொடர்பான சாத்தியங்களை உண்டாக்கும்




காரணியாகும் என்ற பிரபலமான விஞ்ஞான விதியொன்றையே மேற்படி ஆராய்ச்சி பொய்யாக்கியுள்ளது.


சூரியனின் தொழிற்பாடுகளில் ஏற்படும் மாற்றங்கள், சூரியனிலிருந்து வெளியாகும் வெப்பக் கதிர்களின் செறிவை பாதிக்கும் என்பதே தெளிவான உண்மையாகும். கடந்த இருபது வருடங்களில் செய்யப்பட்ட மேக மூட்டங்கள் தோன்றுவதற்கும் சூரியனின் வெப்பக்கதிர்களுக்கும் குறிப்பிடத்தக்களவான எந்தத் தொடர்பும் இல்லையென பிரித்தானிய விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

## பலதும் பத்தும்

**✱ எமது சூரியத் தொகுதியில் காணப்படும் அனைத்துக் கிரகங்களினதும் மொத்தத் திணிவு, மொத்த சூரியத் தொகுதியின் திணிவின் 0.14 சதவீதமாகும். ஏனைய 99.86 சதவீத திணிவு, சூரியனின் திணிவாகும்.**

**✱ வியாழன் கோளின் காந்தப் புலச் சக்தியானது மிகவும் பெரியதாகும். பில்லியன் கணக்கான வோட்ஸ் காந்தப் புலச் சக்தியை ஒவ்வொரு நாளும் வியாழன் கோள் பூமிக்கு விடுவிக்கின்றது.**

**✱ சூரியன் ஆக்கப்பட்டுள்ள மூலப்பொருளின் மிக நுண்ணிய பகுதியொன்று, சுமார் 160 கிலோமீற்றர்களுக்கு அப்பால் இருக்கும் ஒருவரையே கொல்லும் சக்தி கொண்டது.**



**✱ புளூட்டோவானது, சூரியனைச் சுற்றி வருவதற்கு 248 ஆண்டுகள் எடுக்கும்.**

**✱ செவ்வாய்க் கிரகத்தில் காணப்படும் Olympus mons என்ற எரிமலையே சூரியத் தொகுதியில் காணப்படும் மிகப் பெரிய எரிமலையாகும். 600 கிலோமீற்றர்கள் வரை பரந்து காணப்படும் இவ் எரிமலையின் உயரம் 27 கிலோமீற்றர்கள் ஆகும். எவரெஸ்ட் சிகரமானது வெறும் 8.5 கிலோமீற்றர்கள் என்பது நீங்கள் அறிந்ததே!!**

**✱ எமது பூமியில் காணப்படும் சில பாறைகள் செவ்வாய்க் கிரகத்தின் சில பகுதிகளாகும்.**

**✱ சனிக் கிரகத்தின் அடர்த்தி மிகவும் குறைந்ததாகும். இக்கிரகத்தை நீரில் இட்டால் மிதக்கும் தன்மை கொண்டது!!**

## விண்ணுக்கு முதல் மனிதன் ஏகி 47 ஆண்டுகளாகின்றன

கடந்த 12 ஆம் திகதியுடன், விண்வெளிக்கு முதல் மனிதன் சென்று 47 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அமெரிக்காவை முந்திக் கொண்டு, சோவியத் ஒன்றியம் 1961 ஆம் ஆண்டு, முதன்முறையாக, யூரி ககாரின் என்ற விண்வெளி வீரரை விண்வெளிக்கு அனுப்பி சாதனைகள் கொண்ட சரித்திரம் படைத்தது.



மணிக்கு 27,000 கிலோமீற்றர்கள் வேகத்தில் பூமியைச் சுற்றி 108 நிமிடங்கள் யூரி ககாரின் வலம் வந்தார். இவர் மிகவும் பாதுகாப்பாக தனது பயணத்தை முடித்துக் கொண்டு பூமிக்கு திரும்பிய நிகழ்வை பல நாடுகளும் பாராட்டியிருந்தன.

1957 ஆம் ஆண்டு, சோவியத் ஒன்றியம் 'லைக்கா' எனும் நாயை விண்வெளிக்கு அனுப்பியமையும் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும்.

1968 ஆம் ஆண்டு, மொஸ்கோவிற்கு வெளியே ஏற்பட்ட விமான விபத்தில் ககாரின் உயிரிழந்தார். இந்த விபத்து சந்தேகத்துக்கிடமான நிகழ்வாகவும் பலராலும் கணிப்பிடப்பட்டது.

தபால் மூல ஆங்கில பாடநெறி ENGLISH Course
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தவாரே எம்முடன் இணைந்து ஆங்கிலத்தை சரளமாகவும் தெளிவாகவும் கற்றுக் கொள்ள முடியும்
* கிளாஸ் போகும் காலம் நேரம் மிகுதி / வீண் கட்டணங்கள் இல்லை
* குருகிய காலம் என்பதால் 1 மாதத்தில் பாடநெறியை முடிப்பதால் பயன் இல்லை
* அடிப்படையில் இருந்தே கற்றுக்கொடுக்கப்படும்
பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய பேக் ஒன்றும் Tigo Sim Card (தொலைபேசி இணைப்பு) ஒன்றும் வழங்கப்படும்
முதல் இணையும் 200 மாணவ/மாணவிகளுக்கு மாத்திரமே Tigo Sim ஒன்று இலவசம்
இந்த Diploma சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 15/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Tel: 0773 123 523
மாற்று வழிகளிலோ, மறைமுகமான கட்டணங்களோ அறவிடப்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாடு…

**1453** இல் கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியரால் கைப்பற்றப்பட்டது. அதன் விளைவாக ஐரோப்பிய மறுமலர்ச்சி மிக விரைவாக ஏற்பட்டது. உலக வரலாற்றிலேயே ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியானது மிகமிக முக்கிய சம்பவங்களைக் கொண்ட நிகழ்வுகளாகவும் உலகின் அனைத்துத் துறைகளினதும் வரலாற்று போக்கையே மாற்றியமைத்த நிகழ்வுகளாகவும் கருதப்படுகிறது. இம்மறுமலர்ச்சியானது பற்பல துறைகளில் செல்வாக்குச் செலுத்தியது. அவையாவன:

1. கலாசார மறுமலர்ச்சி
2. விஞ்ஞான மறுமலர்ச்சி
3. சமய மறுமலர்ச்சி
4. நாடுகளைக் கண்டுபிடித்தல்

என்பனவாகும்.

## தூண்டுகோல்கள்

**1. வர்த்தகப் பாதை தடைப்பட்டமை**

துருக்கியர் பொல்கன் குடாநாட்டைகைப்பற்றி 1453 இல் கொன்ஸ்தாந்திநோபிளையும் கைப்பற்றியதோடு நில்லாமல் அடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்திற்குள் மொசப்பத்தேமியா லெவந்து, சிரியா, பலஸ்தீனம், எகிப்து, அரேபியா முதலான நாடுகளையும் கைப்பற்றி தனது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தது. இதன் காரணமாக ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் தரைமார்க்கமாக நடைபெற்ற வர்த்தகம் தடைப்பட்டது. அக்காலத்தில் கீழைத்தேய நாடுகளில் இருந்து பட்டு, வாசனைத் திரவியங்கள், யானைத்தந்தம் உள்ளிட்ட பல பொருட்களை வர்த்தகங்களுக்காக எடுத்துச் சென்று கொன்ஸ்தாந்திநோபிள் நகரில் ஐரோப்பிய வர்த்தகர்களுக்குக் கொடுத்து அதற்கு பதிலாக ஐரோப்பிய வர்த்தகர்களிடம் இருந்து மேலைத்தேய பொருட்களை பெற்றுக்கொண்டனர்.

துருக்கியரின் நடவடிக்கையால் இந்த முறை முற்றாகத் தடைப்பட்டன. அக்காலத்தில் மூன்று பாதைகளிருந்தன. இந்தியாவிலும் ஆசிய கீழ்த்திசை நாடுகளில் இருந்து பார்சியாக் குடாவுக்கூடாக பினிஷியாவுக்குக் கொண்டு செல்லப்பட்ட வாசனைத் திரவியங்கள் ஐரோப்பாவிற்கு அனுப்பப்பட்டன. சிரியாவைத் துருக்கியர் கைப்பற்றியதும் அப்பாதையைதடை செய்தனர். மத்திய ஆசியாவிலிருந்து கரீபியன் கடல் கருங்கடல் மூலம் கொன்ஸ்தாந்திநோபிலுக்கு கொண்டு செல்லப்பட்ட பாதை 1453ற்குப் பின் தடைப்பட்டது. கீழ் நாடுகளிலுள்ள பொருட்கள் கடல்மார்க்கமாக எகிப்துக்கு அனுப்பப்பட்டு எகிப்தின் துறைமுக நகரான அலெக்சாந்திரியாவிலிருந்து கடல்மார்க்கமாக ஐரோப்பாவுக்குக் கொண்டு செல்லப்பட்டன. இதுவே மூன்றாவது பாதையாகும். இவ்வழிகளால் ஐரோப்பாவை அடைந்த பொருட்கள் வெனிஸ், ஜேனோவா முதலிய இடங்களில் சேர்க்கப்பட்டமையால் அந்நகரங்கள் வர்த்தக தளங்களாய் அமைந்தன. துருக்கியரின் ஆதிக்கத்தால் அவ் வர்த்தகம் குன்றிப்போக ஐரோப்பிய நாடுகளுக்கு இடையூறில்லாத புது மார்க்கங்களைக் கண்டு பிடிக்க வேண்டிய கட்டாயத்தேவை ஏற்பட்டது. ஐரோப்பிய மக்களுக்கு கீழைத்தேய பொருட்களில் மோகம் ஏற்பட்டதால் நல்ல கேள்வி ஏற்பட்டது. வர்த்தகத்துறையில் ஈடுபட்டு வந்த வர்த்தகர்களுக்கோ பாதை தடைப்பட்டமையால் தமது வர்த்தகத்தை தொடர்ந்து மேற்கொள்ளமுடியாத சூழ்நிலை. இதனால், புதிய பாதைகளைக் கண்டு பிடிக்க உடனடியாகவே செயலில் இறங்கினர்.

**2.அறிவியல் விழிப்புணர்ச்சி**

நாடுகாண் பயணங்களை மேற்கொள்ள ஐரோப்பியரைத் தூண்டிய மற்றொரு காரணியாக அறிவியல் விழிப்புணர்ச்சியைக் கூறலாம். இதுவரைகாலமும் புவிதட்டை வடிவமானதென்றும் அதனால், கடற்பயணங்களை மேற்கொள்ள முடியாதென்றும் எண்ணிய புராதன மக்களின் நம்பிக்கை நாளடைவில் குறைந்து போனது. மாறாக, புவி உருண்டை வடிவானது என ஐரோப்பிய கடலேடிகள் உறுதியாக நம்பத் தொடங்கினர். இதற்கு போர்த்துக்கேய இளவரசனான கடலோடி ஹென்ரியின் பேராதரவும் அவனது பெருமுயற்சியினால் வானசாஸ்திரம், புவியியல் நிபுணர்களின் ஆய்வுகளும், கடற்பிரயாணங்களின் ஆராய்ச்சிகளும் வெகுகாலமாக நடைபெற்று வந்தன.







அதன்பின் போலந்து நாட்டவரான கொபர்னிகஸ் (1473-1543) என்பவர் புவிதட்டை வடிவமானது என்பதை நிராகரித்து புவி உருண்டை வடிவானது என்பதை ஆதாரபூர்வமாக நிரூபித்தார். அது மட்டுமன்றி அனைத்துக் கோள்களும் சூரியனைச் சுற்றி வருவதாகவும் குறிப்பிட்டார். இதனால், நிக்கலஸ் கொபர்னிகஸ் 'வானசாஸ்திரத்தின் தந்தை' எனக் கருதப்படுகிறார். கெப்லர் என்பவர் (1571-1630) கணிதச் சமன்பாடுகளைப் பயன்படுத்தி கொபர்னிகஸின் கருத்தை நிரூபித்தார். பல்கலைக்கழக பேராசிரியரான கலிலியோ கலிலி தொலைநோக்கியைக் கண்டுபிடித்து அதன் மூலம் வானில் உள்ள பொருட்கள் குறித்து விரிவான ஆய்வினை மேற்கொண்டார். இதனையடுத்து கொபர்னிகஸின் புவி உருண்டை வடிவானது என்ற கருத்து ஊர்ஜிதம் செய்யப்பட்டது. துருவ நட்சத்திரங்களின் தூரத்தைக் கணிக்கக்கூடிய 'அஸ்றோலேப்' என்ற கருவியும், 'கொம்பஸ்' என்ற திசையறி கருவியும் கண்டுபிடிக்கப்பட்டமை கடலோடிகளுக்கு மிகவும் உதவியாக இருந்தன.

**3. அரசர்களின் முடிவு**

ஐரோப்பாக் கண்டத்தின் தென் மேற்கு மூலையில் அடுத்தடுத்து அமைந்த இரு நாடுகளாகிய போர்த்துக்கல்லும், ஸ்பெயினும் (Spain) நாடுகாண் பயணங்களில் ஆரம்பகாலத்தில் மிக ஊக்கத்துடன் செயல்பட்ட இருநாடுகளாகும். போர்த்துக்கல்லைச் சேர்ந்த ஹென்ரி இளவரசன், ஸ்பெயினைச் சேர்ந்த பேர்டினன், இஸபெல்லா இளவரசி ஆகியோர் கடற்பயணங்களை மேற்கொள்பவர்களுக்கு உதவ முன்வந்தனர். போர்த்துக்கல் இளவரசன் இதனால், 'கடலோடி' என்ற காரணப் பெயருடன் கடலோடி ஹென்ரி (1394-1460) என வரலாற்றில் அழைக்கப்பட்டான். இவனின் ஊக்கத்தினால் ஆபிரிக்காவின் மேற்குக்கரை முழுவதையும் போர்த்துக்கேய கடல்வீரர்கள் பரிசோதித்து முடித்தனர். மேலும், இந்த ஐரோப்பியக் கடலோடிகள் நீண்ட கடற் பிரயாணங்கள் செய்யத் தொடங்கினர். கடலோடி ஹென்ரி மன்னன் சென்.வின்சன்ட் (St.Vincent) முனையில் கடற்பயண செயற்பாடுகளைப் பயிற்றுவிக்கும் நிலையமொன்றை நிறுவினான். கி.பி 1419 இல் நிறுவப்பட்ட இந் நிலையத்தில் படவரைஞர்கள், வானசாஸ்திர வல்லுனர்கள் போன்ற பல்வேறு துறையினரும் அமர்த்தப்பட்டனர். ஹென்ரியின் பெருமுயற்சியின் விளைவாக செனீகல், மதீரா, கனரி உள்ளிட்ட பல ஆபிரிக்க பிரதேசங்கள் போர்த்துக்கேயரின் குடியேற்றங்களாக்கப்பட்டன.

**4. சமயம் பரப்பும் நோக்கம்**

போர்த்துக்கேயரையும், ஸ்பானியரையும் வெறுமனே வர்த்தகமும் தனம் சேகரிக்கும் நோக்கமும் மாத்திரமே கடற்பிரயாணம் செய்யத் தூண்டியதென நினைக்கமுடியாது. இவ்விரு நாடுகளினதும் மதமாகிய உரோமன் கத்தோலிக்க மதத்தையும் பரப்புவதே அவர்களின் பிரதான நோக்கமாயிருந்தது. கிறிஸ்தவர்களையும், வாசனைத் திரவியங்களையும் தேடியே வந்ததாக வஸ்கொடகாமாவுடன் சென்ற கடலோடி ஒருவன் கூறினான். நாடுகாண் பயணங்கள் உச்ச நிலை அடைந்தபோது, போர்த்துக்கேயர், ஸ்பானியரிடையே போட்டி ஏற்படவே அதனைத் தவிர்க்க அப்போ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காண் பயணங்கள்

தைய பாப்பரசர் உலகை இரண்டாகப் பிரித்து மேற்குப் பிரதேசங்களுக்கு ஸ்பானியரும் கிழக்கு பிரதேசங்களுக்கு போர்த்துக்கேயரும் செல்லவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். இதற்கு மெக்ஸிகோவில் இருநாடுகளுக்கும் ஏற்பட்ட போட்டியே பிரதான காரணமாகும். இதனடிப்படையிலேயே உலகின் மேற்கு பிரதேச நாடுகளான மத்திய, தென் அமெரிக்க நாடுகளை ஸ்பானியாவும், கிழக்குலக நாடுகள் சிலவற்றை போர்த்துக்கல்லும் கைப்பற்றின.

5. வீரதீரச் செயல்கள்

இக்காலத்தில் சாதனைகள் படைக்க வேண்டுமென்ற ஆவல் ஆட்கொள்ள பலர் கடற்பயணங்களை மேற்கொண்டு நாடுகளைக் கண்டுபிடித்தனர். இத்தகைய முயற்சியில் துணிந்து ஈடுபடுபவர்களை அந்நாடுகளின் மன்னர்களும் மக்களும் பெரிதும் போற்றினர்.

6. குடியேற்ற நோக்கு

நாடுகாண் பயணங்களின் ஆரம்பத்தில் மேற்குறித்தவை காரணங்களாக அமைந்தாலும் நாளடைவில் அது குடியேற்றங்களை உருவாக்கி தங்கள் நாட்டு மக்களை குடியேற்ற வேண்டுமென்ற நோக்கில் விரிவடைந்தது. இந்த வகையில் ஆரம்பத்தில் போர்த்துக்கல், ஸ்பானியாவும் பின்னர் பிரித்தானியா, பிரான்ஸ், ஒல்லாந்து முதலிய நாடுகளும் இணைந்து கொண்டன.

7. மூலப்பொருட்களை பெறும் நோக்கு

நாடுகாண் பயணங்கள் 18 ஆம் நூற்றாண்டின் பின் மூலப்பொருட்களை பெறுவதற்கும் தமது பொருளாதார வளத்தைப் பெருக்கவும் ஒரு தளமாக நாடுகளைக் கைப்பற்றும் கைங்கரியத்தில் ஐரோப்பிய நாடுகள் ஈடுபட்டன. இந்த வரிசையில் இறுதிக் காலத்தில் பெல்ஜியம், ஜேர்மனி, இத்தாலி என பல நாடுகள் இணைந்து கொண்டன. இந்நாடுகள் வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆசியா, அவுஸ்திரேலியா இறுதியில் ஆபிரிக்கா ஆகிய கண்டங்களின் பல்வேறு நாடுகளை தத்தமக்குள் பங்கு போட்டுக் கொண்டன.

## நாடுகளைக் கண்டுபிடித்தல்

* 1486 இல் ஆபிரிக்க கண்டத்தின் தெற்கு முனைவரை சென்ற பார்த்தலோமியோ டயஸ் என்பவர் அவ்விடத்தில் புயல் அமோகமாகக் காணப்பட்டமையால் அம்முனைக்குப் 'புயல்முனை' என்றும் பெயரைக் கொடுத்து போர்த்துக்கேயத்துக்குச் சென்ற பொழுது அந்நாட்டு மன்னன் அதற்கு 'நன்னம்பிக்கை முனை' என்று பெயரிட்டான்.

* 1497 இல் போர்த்துக்கேய நாட்டின் தலைநகரான லிஸ்பன் நகரத்தில் இருந்து தனது பயணத்தை ஆரம்பித்த வஸ்கொடகாமா நன்னம்பிக்கைமுனையைச் சுற்றி இந்து சமுத்திரத்தில் தென்மேல் பருவக்காற்றின் உதவியுடன் ஆபிரிக்காவின் கிழக்குப் பகுதிக்குச் சென்று அவ்விடத்தில் இருந்து இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள கள்ளிக்கோட்டையை காமா இப்னு, மஜீத் ஆகிய இரு முஸ்லிம் மாலுமிகளின் உதவியுடன் வந்தடைந்தான். இந்தியாவுக்கு வருவதற்கான கடல்மார்க்கத்தைக் கண்டுபிடிக்கும் ஆவல் இதனால், பூர்த்தியானதுடன் இந்தியாவைக் கண்டுபிடித்த முதல் ஐரோப்பியர் என்ற பெருமையையும் வஸ்கொடகாமா பெற்றார்.




* இத்தாலிய நாட்டைச் சேர்ந்த அமெரிக்கோ வெஸ்பூச்சி என்பவன் கொலம்பஸைப் பின்பற்றி அமெரிக்க பெருநிலப் பகுதியில் கால் வைத்தான். அதனால், அதற்கு அமெரிக்கா எனப் பெயர் சூட்டப்பட்டது.

* 1500 இல் கப்றாஸ் என்னும் போர்த்துக்கேய யாத்திரிகன் தென் அமெரிக்காவிலுள்ள பிரேசில் என்ற பகுதியை அடைந்தான். இவ்வாறு மேற்குப்புற கடல்மார்க்கமாக இந்தியாவுக்கும் ஆசியாவுக்கும் செல்ல எண்ணிய ஐரோப்பியர் புதிய ஒரு கண்டம் இருப்பதை சிறிது சிறிதாக அறியத் தொடங்கினர்.

* 1513 இல் பல்போவா என்பவன் தங்கத்தைத் தேடி பனாமா நீரிணையை அடைந்தான்.

* அமெரிக்காவுக்குச் சென்ற ஸ்பானியர் அதன் தென்பகுதியையும் மத்திய பகுதியையும் பார்த்தபொழுது அங்கே புராதன நாகரிகம் மிளிர்ந்து கிடந்த மெக்சிக்கோ, பேரு ஆகிய நாடுகளில் அஸ்டெக்ஸ், இன்காஸ் ஆகிய பூர்வீக குடிகளைக் கண்ணுற்றனர். 1519 இல் ஸ்பானியரான பெர்ணான்டோ கோட்டைஸ் என்பவன் மெக்ஸிகோவைக் கண்டுபிடித்தான்.

* 1533 இல் ஸ்பானிய வீரனான பிரான்சிஸ்கோ பிஸாறோ என்பவன் 'பெரு' தேசத்தைக் கண்டுபிடித்தான். கோட்டைஸ், பிஸாரோ ஆகிய இருவரும் கணிசமான 'அஸ்டெக்ஸ், இன்காஸ்' பூர்வீகக் குடிகளைக் கொன்று அவர்களை அடக்கினர்.



* வடஅமெரிக்காவின் பிரபல 'சென்ட் லோரன்ஸ்' நதியைச் சூழவுள்ள பிரதேசம் 1535 இல் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜக்குவிஸ் கார்டியரினால் கண்டுபிடிக்கப்பட்டது.

* அமெரிக்காவின் செழிப்புமிகு பிரதேசமான மிசூரி மிசிசிப்பி பிரதேசம் 1573 இல் ஜொலைட் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

* இன்றைய கனடாவின் மிகப்பெரிய மாகாணமும் பிரெஞ்சு கத்தோலிக்கர்களைக் கொண்ட குடியேற்றமுமாகிய கியூபெக் பிரதேசம் 1608 இல் சம்ப்ளேன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

* 1609 இல் ஹென்றி ஹட்சன், ஹட்சன் நதியையும், ஹட்சன் வளைகுடாவையும் கண்டுபிடித்தார். அதனால், அவற்றிற்கு அப்பெயர் சூட்டப்பட்டது.

இவ்வாறு நடைபெற்ற யாத்திரைகளின் பயனாக ஐரோப்பியர்கள் புதிய இடங்களுக்குச் சென்றதுமில்லாமல் கடலோடும் திறமை, புதிய யுத்த யுக்திகள், விடா முயற்சி என்பனவற்றைப் பழகிக் கொண்டனர். வட அமெரிக்காவின் கிழக்குக் கரையில் ஆங்கிலேயரும் கனடாவில் பிரான்ஸியரும் குடியேறினர். தென் அமெரிக்காவிலும் மத்திய அமெரிக்காவிலும் ஆதிக் குடிகளோடு ஸ்பானிய மக்கள் கலந்து புது சாம்ராச்சியங்களை உருவாக்கினர். அவையே லத்தீன் அமெரிக்க குடியேற்ற நாடுகள் என அழைக்கப்பட்டன.

ப.இரஞ்சித் ஜெயகர்

# போதிய உறக்கமின்மையால் குழந்தைகளுக்கு கூடிய எடை

குழந்தைகளின் குறைந்த அளவு உறக்கமானது அவர்களுக்கு கூடிய எடையை ஏற்படுத்தக்கூடியதும் பிற்காலத்தில் மனக்கிலேசம், மன அழுத்தம் என்பனவற்றை ஏற்படுத்தக்கூடியதுமாகும் என்று ஆய்வு ஒன்று மூலம் தெரியவந்துள்ளது.

குழந்தைகளுக்கு போதியளவு உறக்கமானது பல்வேறு வகைகளில் உடல் நலத்தில் நன்மைகளை ஏற்படுத்தக்கூடியது என்றும் அந்த ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

ஏற்கனவே நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் மிகக் குறைந்தளவு உறக்கமானது வளர்ந்த பிள்ளைகளுக்கும் பெரியவர்களுக்கும் கூடிய எடையை ஏற்படுத்தக்கூடியது என்று தெரியவந்தது.



'ஹார்வார்ட்' மருத்துவப் பாடசாலை ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வு மூலம் இந்நிலை குழந்தைகளுக்கும் பொருந்தும் என்று தெரியவந்துள்ளது.

மஸாசூட்டில் 915 குழந்தைகளில் நடத்தப்பட்ட ஆய்வில் இருந்து முதல் இரண்டு வருட காலத்தில் நாள் ஒன்றுக்கு 12 மணித்தியாலத்துக்கும் குறைவான நேரம் உறங்கிய குழந்தைகள் 3 வயதாகும்போது கூடிய நேரம் உறங்கிய குழந்தைகளை விட இரண்டு மடங்கு எடையுள்ளவர்களாக இருந்தது தெரியவந்தது.



சிறு குழந்தைகளுக்கு அதிக உறக்கம் தேவை. ஆய்வு நடத்தப்பட்ட இந்தக் குழந்தைகள் சராசரியாக நாளொன்றுக்கு 12.3 மணித்தியாலங்கள் உறங்கியவர்கள்.

நன்கு உறங்காத குழந்தைகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் உண்டு. குழந்தைகள் நன்கு உறங்கவேண்டியதன் முக்கியத்துவத்தை பெற்றோர் அறிந்து கொள்ளவேண்டியது மிக அவசியம்.

இதேவேளை, இரண்டு வயதுக்குழந்தைகள் நாளொன்றுக்கு இரண்டு மூன்று மணித்தியாலங்களுக்கு மேல் தொலைக்காட்சி பார்ப்பதாலும் அவர்கள் மூன்று வயதை அடையும்போது எடை அதிரிக்கும் வாய்ப்பு அதிகம் உண்டு என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறப் பூச்சு (Crayon)









'க்ரயோன்கள்' எனப்படும் நிறப்பூச்சு ஐக்கிய அமெரிக்காவின் நியூயோர்க் மாநகரத்திலிருந்த நிறப்பூச்சு நிறுவனமொன்றின் உரிமையாளர்களான எட்வின் பின்னி, ஹரோல்ட் ஸ்மித் ஆகியோரால் கண்டுபிடிக்கப்பட்டன.

பின்னியும் ஸ்மித்தும் தற்கால 'க்ரயோன்'களை பரபின் மெழுகையும் நிறங்களையும் கலப்பதன் மூலம் உருவாக்கியுள்ளனர். 1903 ஆம் ஆண்டில் 'க்ரயோலா க்ரயோன்கள்' என்ற பெயரில் முதன் முதலில் சந்தைப்படுத்தப்பட்ட இந்த மலிவான கலைப் படைப்பு அக்காலத்தில் விநியோகத்தில் சாதனை புரிந்தது.

# இலையான்கள்

உலகில் 100,000 இற்கும் அதிக இனத்தைச் சார்ந்த இலையான்கள் காணப்படுகின்றன. இவை 'இரு இறகுகள்' என்ற கருத்திலான 'டிப்தெரா' என்ற இனத்தைச் சேர்ந்தவை. இலையானின் சுவை நரம்புகள் அதன் பாதங்களில் இருப்பதனால் அவை ஒரு பொருளின் மீது வந்தமர்ந்தவுடன் அது உண்பதற்கு ஏற்றதா என்பதை அறிந்து கொள்ளும்.





உயிரினங்களில் காணப்படும் திறந்த புண்களிலேயே பறக்கும் இலையான்கள் தமது முட்டைகளை இடுகின்றன. முட்டையிட்ட பின்னர் அதிலிருந்து வெளியாகும் குடம்பிகள் புண்ணின் சீழை உட்கொள்ளும். இதனால் குறித்த புண் விரைவில் குணமாக வாய்ப்புண்டு. முதலாவது உலக மகா யுத்தத்தின்போது இராணுவ வீரர்களைக் குணப்படுத்துவதற்கு வைத்தியர்கள் பறக்கும் ஈக்களின் குடம்பிகளைப் பயன்படுத்தினர்.



வீட்டு ஈக்களுக்குப் பெரிய திரையிடப்பட்ட கண்கள் உள்ளன. இதனால், இவற்றின் பார்வை மங்கலாகவே இருக்கும். ஆயினும் திரையிடப்பட்ட கண்களால் அவற்றால் இலகுவில் பொருட்களை அடையாளம் காண முடியும். மெல்லிய அசைவைக் கூட அவை விரைவில் அறிந்துகொள்ளும். இதனால்தான் இவற்றுக்குப் பின்னால் வருபவைகளிலிருந்து துல்லியமாக தப்பிக் கொள்கின்றன. வீட்டு ஈக்கள் சுமார் 1,941,000 விதமான பக்றீரியாக்களைக் காவிச் செல்கின்றன'' என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

Atlas சித் ரூ -7

அகில இலங்கை
சித்திரம், உறுப்பெழுத்து, உரைநடை கட்டுரைப்போட்டி - 2008

போட்டி முடிவுத் திகதி ஏப்ரல் 30ஆம் திகதி வரை நீடிப்பு

சிலோன் பென்சில் கம்பனி ஏழாவது தடவையாக இப்போட்டிகளை ஏற்பாடு செய்துள்ளது. நீங்கள் சித்திரம், உறுப்பெழுத்து, உரைநடை கட்டுரை ஆகிய போட்டிகளுக்கு உங்கள் விண்ணப்பங்களை இப்போது அனுப்பலாம். இப்போட்டிகளுக்கு கல்வியமைச்சின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் அவர்களால் வழி நடத்தவும்படுகின்றது. பெறுமதி மிக்க பணப்பரிசில்கள் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள், சான்றிதழ்கள்,பரிசுப் பொதிகளை வெல்லுங்கள்.

விபரங்களும், நிபந்தனைகளும்

அனைத்திலங்கை சித்திரப்போட்டி

- முதல் சுற்றுக்கு ஒருவர் எத்தனை சித்திரங்களையும் அனுப்பலாம்.
- 35CM x 45CM வெள்ளைத்தாளில் ஏதேனும் தலைப்பில் எத்தனை விண்ணப்பங்களும் அனுப்பலாம்.
- பெஸ்டல் வர்ணம் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.
- அற்லஸ் பெஸ்டல் பயன்படுத்தினால் அதன் நீலநிற உறையை ஆக்கத்தின் பின்னால் ஒட்டவேண்டும். ஆனால், இது நிபந்தனை அல்ல.

அனைத்திலங்கை உறுப்பெழுத்துப் போட்டி

- ஆரம்பப் பாடசாலை மாணவர்க்கு மட்டும் (தரம் 1-5 வரை)
- ஒருவர் ஒரு விண்ணப்பத்தை மட்டும் அனுப்பலாம்.
- சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடத்தப்படும். (மொழிப் பாடநூலில் இருந்து புல்ஸ்காப் பேப்பரின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதவும்)

| பிரிவு | சொற்கள் | ஊடகம் |
|---|---|---|
| 1-2-3 | 100 | பென்சில் |
| 4-5 | 150 | போல் பொயின்ற் பேனை |

அகில இலங்கை உரைநடை கட்டுரைப் போட்டி


- இப்போட்டியில் தரம் 6 முதல் 13 வரையிலான மாணவர்கள் பங்கு பற்றலாம்.
- ஒருவர் ஒரு விண்ணப்பம் மட்டுமே அனுப்பலாம்.
- சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஏதேனும் மொழியில் (புல்ஸ்காப் தாளில் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதவும்)
- சொற்கள்: தரம் 6, 7, 8 - 250 சொற்கள்.
  தரம் 9, 10, 11 - 350 சொற்கள்.
  தரம் 12, 13 - 500 சொற்களுக்குக் குறையாமல்.
- கட்டுரை உறுப்பெழுத்து அம்சங்களில் எந்த வகை அற்லஸ் போல்பொயின்ற் பேனையைப் பயன்படுத்தினீர்கள் என்பதை இறுதியில் குறிக்கவும்.

| தரம் | தலைப்புக்கள் |
|---|---|
| 6-7-8 | 1. ஒழுக்க சீலம் வாழ்க்கைக்கு அணிகலனாகும். 2. வாசிப்பு மனிதனை பூரணப்படுத்தும். 3. பொது சொத்துக்கள் காக்கப்பட வேண்டியதன் அவசியம். |
| 9-10-11 | 1. போதைப்பொருள் பாவனையை ஒழிப்போம். 2. கைத்தொழில் மூலமாக நாட்டை கட்டியெழுப்புவோம். 3. இயற்கை வளங்களை காத்திடல். |
| 12-13 | 1. இலங்கையின் பொருளாதாரமும் உலக மயமாக்கலும். 2. இலங்கையில் ஊடக தர்மம். 3. இலங்கையின் சட்டமுறைமைகளும் அதிகரித்து வரும் குற்றங்களும் |

சித்திரக் கண்காட்சியும் பரிசளிப்பு விழாவும்

பரிசளிப்பு விழா: செப்டெம்பர்-09, 2008

அனுப்பப்படும் ஆக்கங்கள் பாட ஆசிரியர் அல்லது வகுப்பாசிரியரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு பாடசாலை அதிபரின் றப்பர் முத்திரை இடப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் விஜய், விஜய, Funday Times (The Sunday Times) என்பவற்றில் பிரசுரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட உங்கள் விண்ணப்பங்களை 'அற்லஸ் சித்ரூ-07' தபால் பெட்டி இல.30, களனி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.




பிரதான அனுசரணை: ஊடக அனுசரணை:

மேலதிக விபரங்களுக்கு சிலோன் பென்சில் கம்பனியுடன் தொடர்பு கொள்க. தொ.பே-011-2912874, 011-2912879.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்தூணின் வரலாறு



நமது நாட்டுக்கு 2500 வருடங்களுக்கு மேற்பட்ட மானிட பரம்பல் வரலாறு இருந்து வருகின்றது. இக்காலப்பகுதிக்குள் இந்நாட்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் நமது முன்னோர் பலவிதமான விடயங்களை விட்டுச் சென்றுள்ளனர். அவர்களின் கால கட்டிட நிர்மாணத்திற்குச் சான்றாக இன்றும் எமது நாட்டில் ஆங்காங்கே கட்டிடங்களின் சிதைவுகள், எச்சசொச்சங்கள் காணப்படுகின்றன. இவை யுகத்திற்கு யுகம் வேறுபட்ட தன்மைகளையும் சிறப்பம்சங்களையும் கொண்டுள்ளன.

மானிடவியல் வரலாற்றை நோக்கின் மனிதன் கற்தூண்களைக் குடைந்து எடுத்த வரலாறு நீண்டு செல்கின்றது. கற்தூண்களின் வரலாற்றையும் முக்கியத்துவத்தையும் நாம் ஆராயும் போது ஆரம்பத்தில் முட்டு வடிவத்திலான மரத்தூண்களைக் காணமுடிகின்றது. இத்தகைய மரத்திலான முட்டுக்கள் கரையான் அரிப்புக்குட்பட்டதால் காலப்போக்கில் அழிவுறும் நிலை ஏற்பட்டது. இதற்கு மாற்று வழியாக கல்லொன்றை வைத்து அதில் வாய் அகலமான மட்பாண்டம் ஒற்றை வைத்து அதற்குள் மரத்தூணை வைக்கும் நிலை இருந்தது.



காலப்போக்கில் மண்ணால் ஆன சுவர்களுக்குப் பதிலாக சுட்ட மண்ணைக் கொண்டு சுவர் நிர்மாணிக்கப்பட்டது. பின்னர் வெறும் மண் கட்டிகளாக இருந்தவை அச்சுக்களைக் கொண்டு அழகாக வெட்டி எடுக்கப்பட்டு செங்கட்களாக சுட்டெடுத்து கட்டிடம் கட்டும் நிர்மாணக் கலை ஆரம்பமாகியது.

பின்னர் இந்தத் தூணின் அடிப்பாகம் கருங்கல்லால் ஆனதாக மாறியது. அடிப்பாகம் கருங்கல். மேற்பாகம் மரத்தால் ஆன தூண்களாக கட்டிட நிர்மாணம் ஆரம்பமாகியது. இவற்றுள் பல்வேறு விதமான கலை வடிவங்கள் காணப்பட்டன. அடிப்பாகம் மலர்கள் உள்ள கலசமாகவும் இன்னும் பல வடிவங்களிலும் அமைக்கப்பட்டன.

## தூண்களின் பாகங்கள்

தூண்கள் முக்கியமாக மூன்று பாகங்களாக உள்ளன. தூணின் தலைப்பாகம், அடிப்பாகம் (பாதம்) தூண் ஆகிய மூன்று பகுதிகளுமே அவையாகும். ஆனால், பிற்காலத்தில் தூணின் பாகம் பகுதியான அடிப்பாகத்தின் நுனிப்பகுதியிலும் கலைநுட்பங்கள் கொண்ட அழகிய வடிவங்கள் குடைந்து எடுக்கப்பட்டு பொருத்தப்பட்டதாக காணப்படுகின்றன. இதில் பலவிதமான உருவங்கள், மலர் வடிவங்கள் மற்றும் சிற்ப வடிவங்கள் என்பன காணப்படுகின்றன.

இவ்வாறாக வெறும் கற்தூண்கள் காலப்போக்கில் விதம் விதமான கலை வடிவங்களைப் பெற்று கண்கவர் கலையம்சங்களை வெளிப்படுத்தும் அழகிய தூண்களை செதுக்கி அல்லது பாறாங்கல்லில் இருந்து வடித்தெடுக்கப்பட்டன.

ஆரம்ப காலத்தில் இந்த தூண்கள் வட்ட வடிவத்தையுடையதாக இருந்ததாயினும் 'பல்லவர்' சம்பிரதாயத்துடன் நாட்சதுர அலங்கார வடிவம் பெற்றவையாக மாற்றம் பெற்றன. ஆரம்ப காலத்தில் கரையான்களில் இருந்து தூண்களைப் பாதுகாப்பதற்கு அமைக்கப்பட்ட மலர்க்கலசம் பிற்காலத்தில் கருங்கல்லால் முழுவதும் வடிக்கப்பட்டன.

## அனுராதபுரக்கால தூண்கள்

அனுராதபுரக் காலப்பகுதிக்குரிய கற்தூண்களில் ஒழுங்கமைப்பு காணப்படுகின்றன. உருவங்கள் முறையாக வடிக்கப்பட்டுள்ளன. தூணின் பாதத்திற்கு அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன.

அனுராதபுர காலத்திற்குரியதான தூபராம மற்றும் லங்காரம ஆகிய இடங்களில் உள்ள தூண்கள் ஒரே வடிவம் பெற்றவையாக உள்ளன. இத்தூண்களின் நடுப்பகுதி வட்டவடிவிலிலும் தூண் முழுவதும் 8 பகுதிகளாக அமைக்கப்பட்டிருப்பதும் சிறப்பம்சங்களாகும்.

யங்காராமயாவில் அமைக்கப்பட்டுள்ள தூண்களில் தலைப்பகுதி சிங்கத்தின் உருவிலும் கோபுரம் நடன சங்கீதமிசைக்கும் உருவங்களைக் கொண்டதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.



## பொலன்னறுவைக்கால கற்தூண்கள்

பொலன்னறுவைக் காலத்திற்குரிய தூண்கள் நாட்சதுர வடிவமுடையவைகளாகும். அவை 12 அடிக்கு மேல் உயரம் இல்லை. மிகவும் கண்கவர் அலங்கார வேலைப்பாடுகளுடனான தூண்கள் 'நிசங்க கலதா' மண்டபப் பகுதியிலேயே அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறே பொலன்னறுவை அரச மாளிகைக்குரிய பகுதியில் உள்ள தூண்களில் மேல் அல்லது தலைப்பகுதி பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அதற்குள் சித்திர வேலைப்பாடுகள் பதியப்பட்டவையாக இருப்பது சிறப்பம்சமாகும். மலர்ச்செடி, அரும்பு,மிருகங்களின் உருவங்கள் போன்ற வேலைப்பாடுகள் உள்ளன.



'லங்காதிலக' விகாரையில் உள்ள தூண்கள் அன்னம் உட்பட பல உருவங்களைக் கொண்டதாக உள்ளன. அவை அடிப்பகுதி முதல் தலைப்பகுதி வரையில் ஒரே உயரம் கொண்டவையாக காணப்படுகின்றன. சில தூண்கள் தலைப்பகுதி சற்று அகலமானதாக அமைக்கப்பட்டு அதைச் சுற்றிலும் அலங்காரங்கள் செதுக்கப்பட்டதாக அமைந்துள்ளன.

குகை விகாரையில் முன் பகுதியில் உள்ள தூண்கள் 10 அடிவரையில் உயரம் கொண்டவையாகும். நாட்சதுர வடிவத்தில் எல்லாப் பகுதிகளிலும் செதுக்கப்பட்ட சித்திர வேலைப்பாடு காணப்படுகின்றது. அவற்றுள் சிங்கத்தின் உருவம் மலர்க் கொடி ஆகிய உருவ வேலைப்பாடுகள் உள்ளன.

## கண்டிய காலம்

பொலன்னறுவைக் காலத்துடன் இவ்வாறான அழகிய வேலைப்பாடுகள் கொண்ட தூண் நிர்மாணம் மறைந்து போயிருப்பதை அவதானிக்க முடிகின்றது. கண்டிய காலத்தில் கருங்கற்களால் குடைந்து எடுக்கப்பட்ட தூண்கள் மிகவும் அரிதாகவே உள்ளன. இக்காலப்பகுதிக்குரிய தூண்கள் செங்கல் மற்றும் சுண்ணாம்பு கலந்து வடிவமைக்கப்பட்டதாகவும், மரத்தாலானவைகளாகவும் உள்ளன. எவ்வாறாயினும் இந்நாட்டின் நீண்டகால வரலாற்றை அவதானிக்கும் போது மிக்க பலம் வாய்ந்த கட்டிடக் கலை நிர்மாணம் ஒன்று இருந்திருக்கின்றது என்பதற்கு அனுராதபுரம் பொலன்னறுவைப் பகுதிகளில் இன்றும் பாதுகாக்கப்பட்டு வரும் கட்டிடங்களின் எச்சங்கள் கற்தூண்களை சிறந்த ஆதாரமாக குறிப்பிடலாம்.

இப்பகுதிகளுக்கு செல்வதன் மூலம் இவற்றை பார்வையிடலாம்.

**அமீர் ஹுஸைன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுகதைகள்

1. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ?
2. அடித்தால் விலகாது அணைத்தால் நிற்காது. அது என்ன?
3. விழிமூடாமல் தூங்கும் விசித்திரப் பிறவி. அவன் யார்?
4. அழுதழுது ஒளி தருவான். அவன் யார்?
5. தட்டு வீட்டினுள் முட்டுப்பலகை. அதுஎன்ன?
6. ஆயிரம் கண்ணுடைய அழகன் அழகாக நடனமாடுவான். அவன் யார்?
7. காய்ப்பார், பூப்பார், கலகலப்பார், காகம் இருக்கக் கொப்பில்லை. அது என்ன?
8. இருட்டில் மறைந்திடுவான். வெளிச்சத்தில் பின் தொடர்வான். அவன் யார்?

### விடைகள்

1. சிரிப்பு
2. தண்ணீர்
3. மீன்
4. மெழுகுவர்த்தி
5. நாக்கு
6. மயில்
7. நெற்கதிர்
8. நிழல்

தொகுப்பு: கு.பவீந்திரா,
மட்/புனித சிசிலியா பெண்கள் தேசிய பாட.,
மட்டக்களப்பு.

# வாசிப்பு ஏற்படுத்தும் பூரணத்துவம்

கல்வி என்பது அலங்காரப் பொருளல்ல. அது வாழ்க்கையின் உயிர்நாடி. தோண்டத் தோண்டக் கிணறு ஊறும். கற்கக் கற்க அறிவு வளரும்.

கல்வியின் நோக்கம் சமநிலை ஆளுமை கொண்ட மனிதனை உருவாக்குவதாகும். வாழ்க்கையோடியைந்ததாகவும், சமுதாய எழுச்சியை மையமாகக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். கல்வி வெறும் ஏட்டுக் கல்வியாக, இயந்திரமயமானதாக, பெறுபேறுகளையும், பட்டங்களையும் மையமாகக் கொண்டதாக இருத்தல் கூடாது. தெளிவான சிந்தனையும் உள்ளதை உள்ளபடியே உணரும் பரந்துபட்ட அறிவும், எந்த நிலையிலும் எவருக்கும் அடிமைப்படாத உறுதிப்பாடும், தன்மானம் நிறைந்ததாகவும் அறிவின் நிலைப்பாடும், நாளுக்கு நாள் புதுமை வளர்க்கும் நாகரிக நிலைப்பாடும் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கும் வாழ்விப்பதற்கும் கல்வி உதவ வேண்டும். இப்படியான கல்வி நிலையை மாணவர்கள் எட்டுவதற்கு வெறும் பாடப் புத்தகங்கள் மட்டும் ஏற்புடையன அல்ல. பாடப்புத்தகங்களோடு மட்டும் இருக்கும் மாணவர்களை இவன் வெறும் புத்தகப்பூச்சி என்று சொல்வதை கேள்விப்பட்டிருப்போம். பாடப் புத்தகங்கள் பாடம் சம்பந்தமான அறிவையே மாணவர்களிடம் வளர்க்கின்றன.

பரந்து பட்ட கல்விப் பயன்பாடும்,






தெளிந்த சிந்தனையும், சமுதாயத்தோடு ஒத்து வாழும் தன்மையும், சமூக நேர்த்தி கொண்ட அறிவும் பெறுவதற்கு 'வாசிப்பு' மிக அத்தியாவசியமானது. சிறந்த மேன்மையான சமுதாய ஒத்திசைவான அறிவைப் பெறுவதற்கு பலவிதமான பத்திரிகைகள், சஞ்சிகைகள், புதுவிதமான ஆக்கங்கள், சிறந்த நூல்கள் போன்றவை மாணவர் அறிவு வளர்ச்சிக்கு மிக அவசியமானதாகும்.

'பாலோடு நீர் கலந்து வைத்தால் நீரை நீக்கி விட்டுப் பாலை மட்டும் அருந்தும் அன்னப்பறவை' அதைப் போல நல்லவற்றைத் தெரிந்து கற்கவேண்டும்.

மனித மேம்பாட்டுக்கும், அறிவு வளர்ச்சிக்கும் வாசிப்பு மிக அவசியமானது. அதனால்தான்'வாசிப்பு மனிதனைப் பூரணப்படுத்தும்' என்று ஆன்றோர் சொல்லி வைத்தனர்.

அ.துளசிகா,
கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்., கொழும்பு-04.

## செய்தி நிறுவனங்கள்

| நிறுவனம் | விரிவாக்கப் பெயர் | தலைமையிடம் |
|---|---|---|
| Reuters | Reuters | லண்டன் |
| BSS | Bangladesh Sangbad Sangstha | டாக்கா |
| UNI | United News of India | புதுடில்லி |
| APP | Associated Press of Pakistan | இஸ்லாமாபாத் |
| AFP | Agence France Press | பாரிஸ் |
| AAp | Australian Associated Press | சிட்னி |
| AA | Anandol Ajansi | அங்காரா |
| SPA | Saudi Press Agency | ரியாத் |

தொகுப்பு: எம்.என்.எப்.ஸீனத்,
ஹ/ஸாஹிரா தே.பாட., ஹம்பாந்தோட்டை.

## மரங்கள் பற்றிய சில தகவல்கள்



பூமியின் மேற்பரப்பின் மூன்றில் ஒரு பாகத்தை மரங்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன.

★ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்களும் சுவிங்கத்தை மென்றிருக்கிறார்கள். 'செபடில்லா' என்ற மரத்தின் பிசினைக் கொதிநீரில் வேக வைத்துச் சுவைத்திருக்கிறார்கள். இப்போதும் இந்த மரம் சுவிங்கம் தயாரிக்கப்பயன்படுகிறது.

★ கலிபோர்னியாவில் 'ரெட்வுட் க்ரீக்' பள்ளத்தாக்கில் 117 மீற்றர் உயரமுள்ள 'சிக்கோயா' என்ற இனத்தைச் சேர்ந்த மரம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த மரங்கள் 130 மீற்றர் உயரம் வரை வளருமாம். சிக்கோயா என்பவர் அமெரிக்கப் பழங்குடி இனத் தலைவராக விளங்கியவர். அவரது இனமான செரோக்கி மக்கள் இன்றும் கலிபோர்னியாவிலும் ஒரிகானிலும் வசித்து வருகிறார்கள். அவரின் நினைவாக இந்த உயரமான மரங்களுக்கு 'சிக்கோயா' என்று பெயர் சூட்டப்பட்டதாம்.

★ உலகிலேயே மிக வயதான மரம் அமெரிக்காவில் வளரும். 'பிரிசில் கோன் பைன்' மரம்தான்.

★ ஆர்ஜன்டீனாவின் 'ஓம்பு' மரம் எவ்வளவு பயங்கரமான புயல் அடித்தாலும் எவ்வளவுதான் அதிக உஷ்ணம் இருந்தாலும் அவற்றையெல்லாம் தாங்கும் ஈரப்பசை உடையது. இது எரியவே எரியாது.

தொகுப்பு: எஸ்.அஸ்மியா,
உலபொத்த.



### வையகம் மகிழ்ந்திடவே....

இளைஞனே....
சாதனை புரிந்திட
எழுந்து நில்
உன்னிடம் உண்டு திறமை
துணிந்து நில்.

ஏழையென்பது தடையல்ல
சாதனை புரிந்திட
நினைத்ததை
துணிந்தே செய்திடு.
முயற்சி செய்திடு
சாதனை புரிய
எதிர்காலம்
உன் கையில்
சாதனைகள் பல புரிந்தே நீயும்
வானத்தையும் தொடு
இவ்வையகம் மகிழ்ந்திடவே....

எம்.என்.எஃப்.ஸீனத்,
ஹ/ஸாஹிரா தே.பாட.,
ஹம்பாந்தோட்டை.

படத்தை இங்கே ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:.....................................

முகவரி:.....................................

.....................................

பாடசாலை:.....................................

வகுப்பு:.....................................


அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அன்பு தம்பி தங்கைகளே!

'கைவண்ணங்கள்' பகுதிக்கு நீங்கள் தொடர்ந்தும் அனுப்பிக் கொண்டிருக்கின்ற சித்திரங்கள் எமக்குக் கிடைத்த வண்ணமிருக்கின்றன. எனினும், எல்லாச் சித்திரங்களையும் ஒரே தடவையில் பிரசுரித்து விட முடியாதல்லவா. எனவே, தொடர்ந்தும் உங்கள் சித்திரங்களை அனுப்புங்கள். நீங்கள் எதிர்பாராத நேரத்தில் உங்கள் சித்திரங்கள் 'கைவண்ணங்கள்' பகுதியில் இடம்பெறலாம். அதேவேளை, நீங்கள் உங்கள் சித்திரங்களை அனுப்பும்போது தவறாமல் உங்கள் பெயர், கற்கும் தரம், பாடசாலை, அதன் முகவரி உட்பட திகதியையும் மறக்காமல் எழுதி அனுப்புங்கள். இந்த விபரங்கள் உள்ளடக்கப்படாத சித்திரங்கள் பிரசுரிக்கப்படமாட்டாது என்பதை நீங்கள் அவசியம் கருத்தில் கொள்ளவும்.



ஃபாத்திமா ஹஸ்னா,
தரம் - 11B,
ஹிஸ்புல்லாஹ் ம.கல்.,
குருநாகல்.



த.கபில்தேவ், தரம் - 8B,
கமு/விஷ்ணு ம.வித்.,
கல்முனை.



அ.சசிதரன், தரம் - 9,
க/விவேகானந்தா த.ம.வித்.,
கண்டி.



எம்.எஸ்.எம்.நுஸ்ரி, தரம் - 4A,
கா/ஸாஹிரா தே.கல்.,
கின்தோட்டை.



ராஜேந்திரன் ரேணுகா,
தரம் - 9B,
தமிழ் மகா வித்தியாலயம்,
பூண்டுலோயா.



சுஹைன் டில்ஷான்,
தரம் - 10D,
சென் ஜோன் பொஸ்கோ
கல்.,ஹட்டன்.



எம்.கையூம், தரம் - 7A,
கழுகமுவ மத்திய கல்.,
கெளியோயா.

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல : 1863

எஃப்.ஆகிலா பாயிஸ்,
தரம் - 2,
க/யஹலத்தன்னை மு.ம.வித்.,
யஹலத்தன்னை.



அங்.இல : 1864

ஏ.மிதுஷன்,
தரம் - 3A,
தி/புனித சூசையப்பர் கல்.,
திருகோணமலை.



அங்.இல : 1865

ஆர்.மயூரதி,
தரம் - 6C,
சிசிலியஸ் பெண்கள் கல்.,
மட்டக்களப்பு.



அங்.இல : 1866

எம்.ஐ.இன்ஷாத்,
தரம் - 7,
குமாரதுங்க மு.ம.வித்.,
மாத்தறை.



அங்.இல : 1867

எம்.எஸ்.ஹனி,
தரம் - 7A,
லைஸியம் சர்வதேச பாட.,
கம்பஹா.



அங்.இல : 1868

திருச்செல்வம் கவிதா,
தரம் - 8A,
நோர்வூட் த.ம.வித்.,
நோர்வூட்.



அங்.இல : 1869

பஜீலா பானு, தரம் - 9,
பு/முதலைப்பாளி அரசினர்
மு.ம.வித்.,
முதலைப்பாளி.



அங்.இல : 1870

ஆ.நிரோஜா,
தரம் - 10,
கிளி/புனித திரேசா பெ.கல்.,
கிளிநொச்சி.



அங்.இல : 1871

ரி.மகிந்தன்,
தரம் - 10T,
லூசியாஸ் ம.வித்.,
கொழும்பு-13.



அங்.இல : 1872

கனகசபை கனிஸ்ரலா,
தரம் - 11,
அம்பலவன் பொக்கனை
ம.வித்., முல்லைத்தீவு.



அங்.இல : 1873

வி.குவிதா,
தரம் - 13(கலை),
மட்/பெரிய கல்லாறு ம.கல்.,
மட்டக்களப்பு.



அங்.இல : 1874

கிஜிஸ்ரி
ஜெயசீலன்,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.






பம்பலப்பிட்டி, இந்துக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற கீழ்ப்பிரிவு மாணவர்களுக்கான இல்ல விளையாட்டுப் போட்டிகளில் விநோத உடைப்போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களையும் ஓட்டப்போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## க்ரோ மேக்னன் மனிதன்

ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பிய பகுதிகளில் முதன்முதலில், தோன்றிய மனித இனம் 'க்ரோ மேக்னன்' (Cro magnon) என்னும் இனமாகும்.

'நியாண்டர்தால்' மனிதனைப் போலவே இந்த இனமும் குகைகளிலேயே வாழ்ந்திருக்கிறது.

உயிரியல் கணக்குப்படி இன்றைய மனித இனத்தை (Homosapien) பெரிதும் ஒத்திருந்த இனம் இவை.



1868 இல் பிரான்ஸிலுள்ள சில குகைகளிலிருந்து 'க்ரோ மேக்னன்' மனிதனின் எலும்புக் கூடுகள் கிடைத்தன. இதனையடுத்து, ஐரோப்பாவின் பல பகுதிகளிலும் எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து 'க்ரோ மேக்னன்' மனிதன் உயரமாக இருந்தானென்றும் நேராக நடந்திருக்கிறான் என்றும் தெரிகிறது. இக்கால மனிதனைப் போலவே மூளையும் நன்றாக வளர்ச்சியுற்றிருந்திருக்கின்றது.

பிரான்ஸின் தென்பகுதிகளிலும் ஸ்பெயின் நாட்டின் குகைகளிலும் 'க்ரோ மேக்னன்' மனிதன் பயன்படுத்திய கற்கருவிகளும், கத்திகள், சுத்தியல்கள், எறி ஈட்டிகள் ஆகியனவும் கிடைத்துள்ளன. கலைநுட்பத்துடன் அவன் செதுக்கிய சிலைகளும் சுவர்களில் தீட்டிய ஓவியங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்காட்டி

ஆரம்பகாலத்தில் வாழ்ந்த மனிதன் இயற்கை வட்டங்களையும் சந்திரனையும் சூரியஒளியையும் கொண்டு நேரத்தைக் கணிப்பிட்டான்.

காலப்போக்கில் இவற்றைவிட சிறந்த முறையான 'நாட்காட்டி' உபயோகிக்கும் முறை அறிமுகமாகியது. அந்த வகையில் 12 மாதங்களைக் கொண்ட நாட்காட்டியை முதன்முதலில் உருவாக்கியவர்கள் என்ற பெருமை பண்டைய கால எகிப்து மக்களையே சாரும்.

நாட்காட்டியை ஆங்கிலத்தில் 'கலெண்டர்' (Calendar) என்பதாகும். இந்த 'கலெண்டர்' என்ற சொல் எப்படிப் பிறந்தது என அறிவீர்களா? பழங்காலத்தில் வாழ்ந்த ரோமானியர்கள், ஒரு மாதம் தொடங்கும் நாளை 'கலெண்ட்' (Kalendea) என்ற பெயர் கொண்டு அழைத்தனர். இச்சொல்லே மருவி பிற்காலத்தில் கலெண்டர் என்ற சொல்லாக உருவாகியதாக சொல்லப்படுகிறது.



Julius Caesar
Gregory XIII

## எகிப்தியர்களின் நாட்காட்டி


எகிப்தியர்களின் நாட்காட்டியின்படி, ஒவ்வொரு மாதமும் 30 நாட்களைக் கொண்டதாகக் காணப்பட்டது. நாளடைவில் சூரியனைக் கொண்டு கணக்கிடப்பட்ட நாட்காட்டியில் வருட இறுதியில் ஐந்து நாட்களைச் சேர்க்கும் வழமையும் காணப்பட்டது. இதன்படி, வருடமொன்று 365 நாட்களைக் கொண்டதாக அமைந்தது.

அத்துடன் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை பெப்ரவரி மாதத்தில் மேலதிகமாக ஒரு நாளைச் சேர்க்கும் முறையும் காணப்பட்டது. இவ்வாறான வருடம் 'லீப் வருடம்' எனப்பட்டது. 'லீப் வருடம்' என்ற எண்ணக்கருவை, எகிப்தின் கிரேக்க சட்டங்களே ஆரம்பத்தில் தோற்றுவித்தன. இவ் எண்ணக்கருவுக்கு ரோமானிய மக்களும் ஆதரவு நல்கினர்.


## ரோமானிய நாட்காட்டி

ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட ரோமானிய நாட்காட்டியானது தற்கால நாட்காட்டியுடன் ஒப்பிடும்போது முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்பட்டது. ரோமானிய நாட்காட்டியின்படி வருடத்தின் முதல் மாதமாக மார்ச் மாதம் கருதப்பட்டது. அத்துடன் ஒரு வருடம் 304 நாட்களை அதாவது 10 மாதங்களைக் கொண்டதாக இருந்தது.

ஆரம்பகால ரோமானியக் கலண்டரில் பெப்ரவரி மாதத்தைத் தவிர்ந்த ஏனைய மாதங்கள் அனைத்தும் 30 அல்லது 31 நாட்களைக் கொண்டு அமைந்திருந்தன. ஆரம்பத்தில் ஓகஸ்ட் மாதம் 30 நாட்களைக் கொண்டது எனக் கூறப்பட்டிருந்தாலும் பின்னர் ரோமானிய செனட்டினால் அம்மாதத்தின் நாட்கள் 31 நாட்களாக மாற்றப்பட்டது. இம்மாதத்துக்கு ஓகஸ்ட் எனப் பெயரிட்டவர், (Augustus Ceaser) ஓகஸ்டஸ் சீஸர் என்பவராவார். அடுத்து ஜூலை மாதமும் 31 நாட்களைக் கொண்டு காணப்படும் எனக் கூறப்பட்டது.



தற்போது பாவனையிலுள்ள நாட்காட்டி



ஜூலியன் நாட்காட்டி

இவ்வாறாக மாதங்களிலுள்ள நாட்களின் எண்ணிக்கை சிறிய சிறிய மாற்றங்களுக்குள்ளாக்கப்பட்டன. பெப்ரவரி மாதம் சாதாரணமாக 28 நாட்களைக் கொண்டு காணப்படும் லீப் வருடத்தில் (இம்மாதத்தில்) 29 நாட்கள் காணப்படும். ஆயினும், ஜூலை, ஓகஸ்ட், செப்டெம்பர் போன்ற மாதங்கள் 31 நாட்களைக் கொண்டு காணப்படுபவையாக விளங்கின.

நாளடைவில் ஏப்ரல், செப்டெம்பர், ஜூன் போன்ற மாதங்கள் 30 நாட்களைக் கொண்டவை என தீர்மானிக்கப்பட்டன.

தற்போதைய நாட்காட்டியிலுள்ள மாதங்களின் பெயர்கள், நாட்களின் எண்ணிக்கை போன்றவை யாவும் ஆரம்ப நாட்காட்டியிலிருந்து திருத்தப்பட்டு மாற்றங்களுக்குள்ளாக்கப்பட்டு வந்தவையாகும். ரோமானியரினால் இடப்பட்ட பெயர்களில், இரண்டு மாதங்களின் பெயர்கள் மாத்திரமே இப்போதுள்ள நாட்காட்டியில் எஞ்சியுள்ளன.

## ஜூலியன் நாட்காட்டி


இதனையடுத்து ரோமின் ஜூலியஸ் சீஸரினால் 'ஜூலியன் கலெண்டர்'


ஓகஸ்டஸ் சீஸர்

அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அதன்பி
லிருந்து ஜனவரி முதலாம் திகதியிலேயே வ
அறிவிக்கப்பட்டதோடு உரோமில் பலராலும்
பின்பற்றப்பட்டது. ரஷ்யா, 1917 ஆம் ஆண்
ஆண்டிலிருந்தும் 'ஜூலியன்' நாட்காட்டியை
கியது.

## க்ரகரியன் நா

பூமி சூரியனைச் சுற்றி வர எடுக்கும் கா
கொள்ளப்பட்ட போது, ஜூ
கள் காணப்படுவது கண்
நிவர்த்தி செய்து, மே
கையாண்டு 1582 இ


க்ரகரியன் நாட்காட்டி அறிமுக விழாவை சித்தரிக்கும் சிற்பம்

Gregory) தயாரிக்கப்பட்ட நாட்
பட்டு பாவனையில் விடப்பட்ட
தயாரிப்பதில் விண்வெளி ஆய்
என்பவரின் உதவியும் பெற்றுக்
இவ்வாறு புழக்கத்தில் வந்த க்
கனவே ஜூலியன் நாட்காட்டியி
நீக்கப்பட்டிருந்தன. க்ரகரியன் ந
ரின் பிறப்பை அடிப்படையாகக்
டது. இதனாலே இது கிறிஸ்
டது. இந்த கிறிஸ்தவ நாட்காட்
லுள்ளது. இதன்படி ஒரு வருடப்
உள்ளடக்கியதாக 12 மாதங்கள
றது. உலகிலுள்ள பல நாடுகளு
ரித்தான பிரத்தியேகமான நாட்க
கொண்டுள்ளபோதும், அவை ப
ரதாய நிகழ்வுகளாக மட்டுப்படுத்தப்பட்டுள்
உண்மையாகும். இந்துக்களின் நாட்காட்டிய
னின் அமைவை அடிப்படையாகக் கொண்டு
நிலவின் சக்கரத்தை அடிப்படையாகக் கொ
றுள்ளன.

## மாதங்களுக்கு பெய

12 மாதங்கள் எவ்வாறு பெயரிடப்பட்டுள்
இங்கு நோக்குவோம்.

**ஜனவரி:**

இது வருடத்தின் முதலாவது மாதமாகக் க
களால் Janus என்ற கடவுளின் நினைவாக
எனப் பெயரிடப்பட்டது. ஆரம்பத்தில் இம்
அழைக்கப்பட்டது.

**பெப்ரவரி:**

இத்தாலியர்களின் கடவுளான Februus எ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருவான விதம்

...து. அதன்பின்னர் கி.பி 45 ஆம் ஆண்டி
...யிலேயே வருடம் ஆரம்பமாவதாக
...ல் பலராலும் இது ஏற்றுக்கொள்ளப்பட்டு
...7 ஆம் ஆண்டிலிருந்தும் சீனா 1949 ஆம்
...ாட்காட்டியை உபயோகிக்கத் தொடங்

## ...யன் நாட்காட்டி

... எடுக்கும் காலம் மிகத் தெளிவாக அறிந்து
...ட போது, ஜூலியன் நாட்காட்டியில் பிழை
...படுவது கண்டறியப்பட்டது. இதனை
... செய்து, மேலதிக நுணுக்கங்களைக்
...ண்டு 1582 இல் க்ரகரி பாப்பரசரால் (Pope



...கப்பட்ட நாட்காட்டி அறிமுகம் செய்யப்
...ல் விடப்பட்டது. இந்த நாட்காட்டியினை
...ளவெளி ஆய்வாளர் Christoper Clavins
...யும் பெற்றுக்கொள்ளப்பட்டது.
...த்தில் வந்த க்ரகரியன் நாட்காட்டியில், ஏற்
... நாட்காட்டியில் காணப்பட்ட பத்து நாட்கள்
... க்ரகரியன் நாட்காட்டியானது, இயேசுநாத
...ப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்
... இது கிறிஸ்... வருடம் என வழங்கப்பட்
...வ நாட்காட்...ய தற்போது பாவனையி
... ஒரு வருடம் 365 அல்லது 366 நாட்களை
...12 மாதங்களைக் கொண்டு விளங்குகின்
...பல் நாடுகளும் கலாசாரங்களும் தமக்கேயு
...கமான நாட்காட்டிகளை உருவாக்கிக்
...தும், அவை பாவிக்கப்படும் நிலைகள் சப்பி
...த்தப்பட்டுள்ளன என்பது வெளிப்படை
... நாட்காட்டியானது, உடுக்களிடையே சூரிய
...ாகக் கொண்டும், முஸ்லிம்களின் நாட்காட்டி
...யாகக் கொண்டும் அமையப் பெற்

## ...து பெயர் வந்த முறை

...ரிடப்பட்டுள்ளன என்பது தொடர்பாக

... மாதமாகக் கருதப்படுகின்றது. ரோமனியர்
... நினைவாகவே இம்மாதத்துக்கு ஜனவரி
...பத்தில் இம்மாதம் (Januarious) என

...ன Februus என்பவரின் நினைவாகவே

பெப்ரவரி எனப் பெயரிடப்பட்டது.

**மார்ச்:**

ரோமானியர்களின் கடவுளான Mars (மார்ஸ்) என்பவரின் நினைவாகவே மார்ச் எனப் பெயரிடப்பட்டது. அத்தோடு Mars என்ற செவ்வாய் பெயரில் ஒரு கோள் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**ஏப்ரல்:**

வருடத்தின் நான்காவது மாதமாகும். Aperire எனும் இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து உருவாகியதே ஏப்ரல் என்ற மாதமாகும்.

**மே:**

ரோமானிய நாட்காட்டியின்படி மூன்றாவது மாதமாக மே மாதம் கருதப்படுகின்றது. இம்மாதம் தொடர்பாக பல்வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. மே என்பது ரோமானியக் கடவுள்களில் ஒன்றான 'மாலா' அதாவது மேக்கியூரியின் தாயைக் குறிப்பதாக ஒரு சாரார் கருத்துத் தெரிவித்தாலும் இலத்தீன் மொழிச் சொல்லான Majores என்பதிலிருந்தே மே என்ற சொல் தோன்றியதாகவும் 'மூத்தோர்' என்பது இதன் அர்த்தமெனவும் இன்னொரு சாரார் கூறுகின்றனர்.

**ஜூன்:**

ரோமானிய நாட்காட்டியின்படி இம்மாதம் வருடத்தின் நான்காவது மாதமாக கருதப்படுகின்றது. Heaven இன் அரசியான ஜூனோ (Juno) வின் நினைவாகவே இம்மாதத்திற்கு ஜூன் எனப் பெயரிடப்பட்டது. இளையவன் எனும் அர்த்தத்தை உடைய Juvenis அல்லது Junioves எனும் இலத்தீன் மொழிச்சொல்லிலிருந்தே ஜூன் என்பது உருவாகியது.

**ஜூலை:**

ரோமானிய நாட்காட்டியை உருவாக்கியவரான ஜூலியஸ் சீஸரின் ஞாபகமாகவே இம்மாதத்துக்கு ஜூலை எனப் பெயரிடப்பட்டது. கி.மு 44 ஆம் ஆண்டுகளில் வாழ்ந்த மார்க் அந்தோனி என்பவரே ஜூலை எனப் பெயரிட்டார். இது ஐந்தாவது மாதம் (Quintilis) என்றும் அழைக்கப்பட்டது. பெயரிடப்பட்டு ஒரு ஜூலை மாதம் மாத்திரமே அவர் உயிருடன் இருந்தார். அதாவது அடுத்தவருடம் மார்ச் மாதத்தில் அவர் கொலை செய்யப்பட்டார்.



க்ரகரியன் நாட்காட்டியை உருவாக்கிய க்ரகரி பாப்பரசர்

**ஒகஸ்ட்:**

முதலாவது உரோமானியச் சக்கரவர்த்தியான ஒகஸ்டஸ் சீஸர் என்பவர் நினைவாகவே இம்மாதத்திற்கு ஒகஸ்ட் எனப் பெயரிடப்பட்டது. அதிர்ஷ்டமான பல விடயங்கள் இம்மாதத்திலேயே அவருக்கு நடைபெற்றிருக்கின்றன. உதாரணமாக, 3 ஆவது முறையாகவும் Triumph யிலுள்ள நகரை அடைந்தமை, எகிப்தை ரோமானிய இராச்சியத்தின் கீழ் கொண்டு வந்தமை போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும்.



ஜூலியஸ் சீஸர்

**செப்டெம்பர்:**

ரோமானிய நாட்காட்டியின்படி ஏழாவது மாதமாக கருதப்படுகின்றது. செப்டெம் (Septem) என்ற சொல்லிலிருந்து உருவாகியதாகும். இதன் அர்த்தம் 'ஏழு' என்பதாகும்.

**ஒக்டோபர்:**

ரோமானிய நாட்காட்டியின்படி எட்டாவது மாதமாகக் கருதப்படுகின்றது. (Octo) ஒக்டோ எனும் இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து உருவாகியதாகும். இதன் பொருள் 'எட்டு' என்பதாகும்.

**நொவம்பர்:**

'நொவெம்' (Novem) என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து உருவாகியதாகும். இதன் பொருள் ஒன்பது என்பதாகும்.

**டிசம்பர்:**

'டிசம்' என்ற இலத்தீன் மொழிச்சொல்லிலிருந்து உருவாகியதாகும். இதன்பொருள் பத்து என்பதாகும்.

இவ்வாறாக ஒவ்வொரு மாதங்களும் பெயர் பெறலாயின.

-ஸாபினாஸ்




ரோமானிய நாட்காட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலி







## தரைத்தோற்றவியல்

தென் அமெரிக்காவின் தென் மேற்குப் பகுதியில் ஒரு கோடு போல் நீண்டு செல்லும் சிலி நாட்டின் நிலப் பரப்பின் மொத்த அளவு 7,56, 626 சதுர கிலோமீற்றராகும். பிரதான நிலப் பரப்புத் தவிர்ந்த மேலும் பல சிறிய தீவுகள் சிலி நாட்டிற்கு சொந்தமானதாகும். அவற்றில் ஈசத், ஜுவான், பெர்ணான்டஸ், செலாய் என்பன முக்கிய தீவுகளாக இனங்காணப்படுகின்றன.

சிலி, மூன்று பிரதான தரைத்தோற்ற அம்சங்களைக் கொண்டுள்ளது. கிழக்கே 'அந்தீஸ்' மலையும், மேற்கே உயரம் குறைந்த மலைகளும் மேட்டு நிலங்களும் காணப்படுகின்றன. ஏனைய பிரிவில் சமவெளிகள் நிறைந்து காணப்படுகின்றன.

நாட்டின் மிக உயரமான மலையான 'ஒ ஜொஸ் டெல் செலாடோ' மலைப் பிரதேசம் விளங்குகின்றது. அதன் உயரம் 6880 மீற்றராகும். இது தவிர, பிரசித்தி பெற்ற 'அட்டகாமா' பாலைவனமும் இம்மலைப்பிரதேசத்திலேயே அமைந்துள்ளது. மேலும், இப்பிரதேசத்தில் உயர்ரக கனிய எண்ணெய் படிவுகள் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

நாட்டின் மத்திய வலயத்திலேயே பெரும்பான்மையான மக்கள் வாழ்கின்றனர். விவசாயத்திற்கு உகந்த வலயமும் இதுவாகும்.

தென் வலயத்தில் நீர் வீழ்ச்சிகள், ஏரிகள், பள்ளத்தாக்குகள் நிறைந்து காணப்படுகின்றன. எரிமலைகள் பலவும் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றன.

'அந்தீஸ்' மலைகளில் ஆரம்பித்து பசுபிக் சமுத்திரத்துடன் கலக்கும் பல நதிகள் சிலி நாட்டில் பாய்கின்றன. லாவா, இல்கியுய், எக்கொள்குவா, மைப்போ, மாவுலே, பைபியோ, இம்பீரியஸ் ஆகியன சிலியின் பிரதான நதிகளாகும்.

## காலநிலை

சிலி நாட்டில் பொதுவாக சம சீதோஷண காலநிலையே நிலவுகின்றது. குளிர்காலத்தில் சாந்தமான காலநிலையும் கோடை காலத்தில் குளிர் நிறைந்தும் காணப்படும். குளிர் பருவத்திலேயே அதிக மழை பொழியும்.

நாட்டின் வட பகுதி முழுமையாக பாலைவனத்தைக் கொண்டது. சிலி நாட்டின் நில அமைப்பானது பசுபிக் சமுத்திரக் கரையோரத்துடன் இணைந்ததாக நீண்டு செல்வதால் சமுத்திரத்தின் செல்வாக்கு நாட்டின் காலநிலையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதன்படி, நாட்டின் வெப்பநிலையும் அடிக்கடி மாற்றமடையும்.

## தாவரங்களும் விலங்குகளும்

வெவ்வேறு காலநிலை நிலவுவதால் பல்வகைத் தாவரங்களை இங்கு காணலாம். மத்திய பள்ளத்தாக்கு பிரதேசங்களில் சிறிய பற்றைக்காடுகளையும் புதர்களையும் புல்வெளிகளையும் ஏராளமான 'பைன்' மரங்களையும் காணலாம்.

இலாமா, எல்பாக்கா, விக்குனா, புமா, அந்தீஸ் நாய்கள், ஹியூமுல் மான் போன்ற மிருகங்களை இப்பிரதேசத்தில் அதிகளவு காணலாம்.

## இயற்கை வளங்கள்

இயற்கை வளங்களில் செம்பு முக்கிய இடத்தை வகிக்கின்றது. இதைத் தவிர நைட்ரேட், நிலக்கரி, பிளாட்டினம், மங்கனீஸ், இரும்புருக்கு என்பனவும் நிறைந்து காணப்படுகின்றன.



## சனத்தொகை

நீண்டகாலமாக வாழும் அமெரிக்க சுதேசிகள் இங்கு வாழும் முக்கிய சுதேச குடிகளாக இனங் காணப்படுகின்றனர். இவர்களைத் தவிர ஸ்பானியர்களும் வாழ்கின்றனர்.

இன்றுள்ள சனத்தொகையில் சுதேச அமெரிக்கர்களும் ஸ்பானியர்களும் கலந்த ஒருவித கலப்பினத்தவர்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றனர்.

## மொழியும் மதமும்

ஸ்பானிய மொழியே அரசகரும மொழியாகும். பெரும்பான்மையோர் இம்மொழியையே கையாளுகின்றனர். அத்துடன் பிரதேச மொழிகள் பலவும் வழக்கத்தில் இருக்கின்றன. அவ்வாறே ஜேர்மன் மொழி பேசுவோரும் ஓரளவுக்கு உள்ளனர்.

நாட்டில் 78% மானோர் ரோமன் கத்தோலிக்கர். 3% மான புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களும் வாழ்கின்றனர். அமெரிக்க சுதேசிகள் தமது சம்பிரதாய பாரம்பரிய மதங்களைப் பின்பற்றுகின்றனர்.

## பொருளாதாரம்

நாட்டின் பிரதான உற்பத்திப்பொருள் செம்பாகும். இன்றுவரை உலகின் செம்பு உற்பத்தியும் ஏற்றுமதியும் செய்யும் பிரதான நாடு சிலி. 1940 ஆம் தசாப்தத்தில் அரசின் முயற்சியால் கைத்தொழில் துறையும் அபிவிருத்தி செய்யப்பட்டது.

* விவசாய உற்பத்தி: அப்பிள், பெயாஸ், வெள்ளைப்பூண்டு, திராட்சைப்பழம்.
* கைத்தொழில்: செம்பு, கனிப்பொருட்கள், உணவு, மீன், இரும்பு, தகரம், மரம்
* ஏற்றுமதிப் பொருட்கள்: செம்பு, மீன், பழங்கள், கடதாசி, இரசாயனப் பொருட்கள்
* ஏற்றுமதி செய்யப்படும் நாடுகள்: அமெரிக்கா, ஜப்பான், சீனா
* இறக்குமதிப் பொருட்கள்: நுகர்வுப் பொருட்கள், இரசாயனத் திரவியங்கள், மோட்டார் வாகனம், எரிபொருள்.
* இறக்குமதி செய்யும் நாடுகள்: ஆர்ஜன்டீனா, அமெரிக்கா, பிரேசில், சீனா
* நாணயம்: சிலி பெசோ (CLP)

## போக்குவரத்தும் தொடர்பாடலும்


நாட்டின் பெரும்பகுதி கடற்கரையோரமாக இருப்பதால் உள்நாட்டுப் போக்குவரத்திற்கும் கடல்மார்க்கம் பயன்படுத்தப்படுகின்றது.

50 க்கும் மேற்பட்ட நாளேடுகள் இங்கு வெளிவருகின்றன.

## நிர்வாகம்

1980 இல் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பின்படியே ஆட்சிமுறை நிலவுகின்றது. நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டுள்ளது. 4 வருடங்களுக்கொரு முறை ஜனாதிபதி தெரிவு நடைபெறும். அமைச்சரவையை தெரிவு செய்து நியமிப்பது ஜனாதிபதியின் கடமையாகும்.

| | |
|---|---|
| அழைக்கப்படும் பெயர்: | சிலி குடியரசு |
| கண்டம்: | தென் அமெரிக்கா |
| வலயம்: | தென்மேற்கு வலயம் |
| எல்லை: | வடக்கில் பேரு நாட்டுக்கும் கிழக்கில் பொலிவியாவிற்கும் ஆர்ஜன்டீனாவிற்கும் தெற்கிலும் மேற்கிலும் பசுபிக் சமுத்திரத்தையும் எல்லைகளாகக்கொண்டுள்ளது. |
| தலைநகர்: | சென்டியாகோ |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக புவித் தினம்




**உலக புவித் தினம் ஏப்ரல் 22 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. 1970 ஆம் ஆண்டு முதல் உத்தியோகபூர்வமாக வருடாந்தம் உலக புவித்தினம் உலக நாடுகளால் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.**

இயற்கை சூழலுக்கும் மனிதனுக்குமிடையே உள்ள தொடர்புகள் எதிர்பாராதவிதமாக அறுந்து போனால் மனிதர்களுக்கு புவியில் வாழ முடியாத நிலை தோன்றும். அத்தகையதோர் நிலைதான் தற்போது படிப்படியாக உருவாகி வருகின்றது. ஆகவே, முழு உலக நாடுகளும் இணைந்து இதற்கு மாற்றீடாக உலக புவித் தினத்தினூடாக புவியை காப்பதற்கு திடசங்கற்பம் பூண வேண்டும்.

## உலக புவித் தினம்

1970 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது புவித்தின கொண்டாட்ட விழாவில் இரண்டு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டிருந்தனர். இதில் பல்வேறு அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் அடங்கினர். இவர்கள் கால்நடையாக வீதிகளினூடாகவும் பிரதான நகரங்களையும் சென்றடைந்து விசேட கூட்டங்களை நடத்தினர். புவிச்சுற்றாடலை நல்லமுறையில் பேண வேண்டியதன் அவசியம் குறித்து அவர்கள் அங்கு குரல் கொடுத்தனர்.

அன்று ஆரம்பித்த இந்த உலக புவித் தினக் கொண்டாட்டம் இன்று வரை உலக அளவில் வருடாவருடம் கொண்டாடப்பட்டு வருகின்றது. 184 நாடுகள் மேற்படி உலக புவித் தினத்தினை இன்றுவரை கொண்டாடி வருகின்றன.

## புவித் தினத்தின் குறிக்கோள்

* மனிதனுக்கும் இயற்கைச் சூழலுக்குமிடையே ஸ்தீரமான பிணைப்பை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

* மனிதனது தவறான நடவடிக்கைகளினால் பாதிப்பிற்குள்ளாகி வரும் இயற்கை வளங்களை காப்பதற்கான வழிமுறைகளை கையாளுதல்.

* கடதாசி, கண்ணாடி மற்றும் இதர கழிவுப்பொருட்களை மீள் சுழற்சி முறைக்குப் பயன்படுத்துவதற்கு மக்களைப் பழக்கப்படுத்தல்.

* ரெயில் மற்றும் பஸ் போன்ற பொதுப் போக்குவரத்துக்களின்போது உரிய விதிமுறைகளின்படி நடந்து கொள்வதற்கு மக்களை வழி நடத்தல், பயணங்களைச் செய்கையில் இயன்றவரையில் கால்நடையாகவோ சைக்கிளிலோ செல்வதற்கு மக்களை ஊக்குவித்தல்.

* புவிவாழ் மக்களின் நலன் கருதி சுத்தமான நீர்வளத்தைப் பெறுவதற்கு உண்டான வழிவகைகளை ஏற்படுத்துதல்.

## பின்னடைவு

புவியின் இயற்கை வளத்தைக் காக்கும் விடயத்தில் மின்வலு உற்பத்தி நடவடிக்கைகள் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதாகவும் கூறப்படுகின்றது. குறிப்பாக மின்வலு அதிகரிப்பு என்ற பெயரில் இயற்கைச் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற காரியங்கள் அதிகரித்து வருகின்றன. இதனால், வளி மாசடைதல், நீர் மாசடைதல் போன்றன நடைபெறுகின்றன. இவற்றின் பெறுபேறாக மனிதர்களும் மரங்களும் மற்றும் இதர உயிரினங்களும் பரந்தளவில் பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டியேற்படுகின்றது. இன்று உலக அளவில் மின்உற்பத்தி செயல்முறைகள் அதிகரித்து வருகின்றமையால் வளி மாசடைவதுடன் அத்தகைய வளியினையே மனிதர்கள் சுவாசிக்க வேண்டியேற்படுகின்றதென்பதை எவரும் அறிந்திருப்பதில்லை. இந்த வகையில் நகர்ப்புறங்களில் வசிக்கின்ற மக்கள் அநேகமாக இவ்வாறான மாசடைந்த வளிகளையே சுவாசிக்கின்றனர். இதன் காரணமாக இருதயக் கோளாறுகள், நுரையீரல் புற்றுநோய் ஆகியன உண்டாவதற்கு மேற்படி வளி மாசடைதல் மிக முக்கிய காரணியாக இருப்பது தெரிய வந்துள்ளது.

## உலக புவித் தினத்தையொட்டிய உங்கள் பங்களிப்பு!

* வனவிலங்குகள், மரங்கள், நீர், மண், வளி ஆகியனவற்றைக் காப்பதற்கு ஒன்றிணையுங்கள்.

* கழிவுப் பொருட்கள், குப்பைகளை உரிய இடங்களில் கையளியுங்கள்.

* இயற்கை வளங்கள் சீரழிக்கப்படுவதை தடுத்திடுங்கள். இயன்றவரையில் நீர், மின்சாரம் ஆகியனவற்றை சிக்கனமாக வீண்விரயமின்றிப் பயன்படுத்துங்கள்.

* வீசியெறிகின்ற கடதாசி, கண்ணாடி உடைவுகளை மீள்சுழற்சிப் பயன்பாட்டிற்கு ஒப்படையுங்கள்.

* பிளாஸ்டிக்,பொலித்தீன் ஆகியனவற்றை பயன்படுத்துவதனை தவிர்த்திடுங்கள்.

* எஞ்சுகின்ற உணவு வகைகள், குடிவகைகளை உங்கள் வீட்டு வளவிற்குள் வருகின்ற பறவைகளுக்கு உண்ண, அருந்த வழங்குங்கள்.

* இயற்கைச் சூழலைக் காப்பதற்கு உங்களது வகுப்பிலோ வேறு பொது சமய ஸ்தாபனங்களிலோ ஒன்றுகூடி பணிகளை முன்னெடுங்கள்.

* வனவிலங்குகள், மரங்கள்,காடு, நீர் உட்பட இயற்கை வளங்கள் தொடர்பாக நன்றாக அறிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

* பட்டுப்போகின்ற மரங்களை காத்து மீண்டும் துளிர்விடச் செய்வதற்கு உங்கள் பங்களிப்பினை வழங்குங்கள்.

தாக்ஷாயினி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

ராணியும் நளினியும் பிறந்ததின விழாவொன்றுக்குப் போக ஆயத்தமான ஒரு நிகழ்வு மூலம் சிங்கள வாக்கிய அமைப்பு சிலவற்றை தருகின்றோம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

නලිනි: එන්න රාණි එන්න.
நளினி: என்ன ராணி என்ன.
நளினி: வாருங்கள் ராணி வாருங்கள்.

මම ඔයා එනකම් බලාගෙන හිටියා.
மம ஒயா எனகம் பளாகென ஹிடியா.
நீங்கள் வரும்வரை நான் பார்த்துக் கொண்டு இருந்தேன்.

රාණි: අද බස් එක ටිකක් පරක්කුයි.
ராணி: அத பஸ் எக டிகக் பறக்குய்.
ராணி: இன்றைக்கு பஸ் கொஞ்சம் லேட்.

හරි සෙනග.
ஹரி செனக.
சரியான சனம்.

නලිනි: ඔයා මොන බස් එකේ ද ආවේ?
நளினி: ஒயா மொன பஸ் எகேத ஆவே?
நளினி:: நீங்கள் எந்த பஸ்ஸில் வந்தீர்கள்?

රාණි: මම ආවේ සී.ටී.බී. බස් එකේ.
ராணி: மம ஆவே சீ.டீ.பீ. பஸ் எகே.
ராணி: நான் சீ.டீ.பீ.பஸ்ஸில் வந்தேன்.

දැන් බස් ගාස්තුත් වැඩියි.
தென் பஸ் காஸ்துத் வெடிய்.
இப்ப பஸ் கட்டணமும் அதிகம்.

නලිනි: ඔයා මොනව ද තෑගි ගත්තේ ?
நளினி: ஒயா மொனவத தேகி கத்தே?
நளினி: நீங்கள் என்ன பரிசு வாங்கினீர்கள்?

රාණි: තෑගි බඩු හරි ගණන්
ராணி: தேகி படு ஹரி கணன்
ராணி: பரிசுப் பொருட்கள் சரியான விலை.

මම ලන්ච් බොක්ස් එකකුයි ලේන්සු දුසිමකුයි ගත්තා.
மம லன்ச் பொக்ஸ் எககுய் லேன்சு துசிமகுய் கத்தா.
நான் ஒரு லன்ச் பொக்சும் கைகுட்டை ஒரு டசினும் வாங்கினேன்.

ඔයා මොනව ද ගත්තේ ?
ஒயா மொனவத கத்தே?
நீங்கள் என்ன வாங்கினீர்கள்?

නලිනි: මම පොත් ටිකක් ගත්තා.
நளினி: மம பொத் டிகக் கத்தா.
நளினி: நான் புத்தகங்கள் சிலவற்றை வாங்கினேன்.

රාණි: ඒක හොඳයි. මේ තෑගි මාලාට ප්‍රයෝජනවත් වෙයි. එහෙනම් අපි යමු.
ராணி: ஏக ஹொந்தய். மே தேகி மாலாட பிரயோஜனவத் வெய். எஹெனம் அபி யமு.
ராணி: அது நல்லது. இந்த பரிசுப் பொருட்கள் மாலாவுக்கு மிகவும் பயனுள்ளதாய் இருக்கும். நாங்கள் போவோம்.

නලිනි: හොඳයි අපි යමු.
நளினி: ஹொந்தய் அபி யமு.
நளினி: நல்லது. நாங்கள் போவோம்.

## අභ්‍යාසය பயிற்சி

வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.

உதா: வாருங்கள் ராணி வாருங்கள்.
එන්න රාණි එන්න.

i. நீங்கள் வரும்வரை நான் பார்த்துக் கொண்டிருந்தேன்.
ii. நீங்கள் எந்த பஸ்ஸில் வந்தீர்கள்?
iii. நீங்கள் என்ன பரிசுப் பொருள் வாங்கினீர்கள்?




## உடன்பாடு வாக்கியமும் - எதிர்மறை வாக்கியமும்

எதிர்கால தனி வாக்கியங்களில் (Future Simple Tense) காணப்படுகின்ற 'உடன்பாடு' வாக்கியங்களை எதிர்மறை வாக்கியங்களாக மாற்றியமைக்கும் முறையை உதாரணங்கள் மூலம் பயில்வோம்.

(அ) I will do - நான் செய்வேன். (உடன்பாடு)
(ஆ) I won't do - நான் செய்யமாட்டேன். (எதிர்மறை)
(அ) You will do - நீ செய்வாய். (உடன்பாடு)
(ஆ) You won't do - நீ செய்யமாட்டாய். (எதிர்மறை)
(அ) We will do - நாங்கள் செய்வோம். (உடன்பாடு)
(ஆ) We won't do - நாங்கள் செய்யமாட்டோம். (எதிர்மறை)
(அ) They will do - அவர்கள் செய்வார்கள். (உடன்பாடு)
(ஆ) They won't do - அவர்கள் செய்யமாட்டார்கள். (எதிர்மறை)

* He, She, It முதலான பிரதிப்பெயர்ச்சொற்களை (Pronouns) எழுவாய் பகுதியில் கொண்டு அமைக்கப்பட்ட வாக்கியங்களை இங்கே அவதானிப்போம்.

(அ) He will do - அவன் செய்வான். (உடன்பாடு) - ஆண்பால்
(ஆ) He won't do - அவன் செய்யமாட்டான். (எதிர்மறை)
(அ) She will do - அவள் செய்வாள். (உடன்பாடு) - பெண்பால்.
(ஆ) She won't do - அவள் செய்யமாட்டாள். (எதிர்மறை)
(அ) It will do - அது செய்யும். (உடன்பாடு) - ஒன்றன்பால்
(ஆ) It won't do - அது செய்யமாட்டாது. (எதிர்மறை)

* மேற்படி வாக்கியங்களில் செயற்படுபொருள் (Object) சேர்க்கப்படுகின்ற போது, அவை பின்வருமாறு அமைகின்றன.

(அ) I will do my work.
நான் எனது வேலையைச் செய்வேன். (உடன்பாடு)
(ஆ) I won't do my work.
நான் எனது வேலையைச் செய்யமாட்டேன். (எதிர்மறை)
(அ) You will do your work.
நீ உனது வேலையைச் செய்வாய். (உடன்பாடு)
(ஆ) You won't do your work.
நீ உனது வேலையைச் செய்யமாட்டாய். (எதிர்மறை)
(ஆ) We will do our work.
நாங்கள் எங்கள் வேலையைச் செய்வோம். (உடன்பாடு)
(அ) We won't do our work.
நாங்கள் எங்கள் வேலையைச் செய்யமாட்டோம். (எதிர்மறை)
(ஆ) They will do their work.
அவர்கள் தங்கள் வேலையைச் செய்வார்கள். (உடன்பாடு)
(ஆ) They won't do their work.
அவர்கள் தங்கள் வேலையைச் செய்யமாட்டார்கள். (எதிர்மறை)

* He, She, It முதலானவற்றை எழுவாய் பகுதியில் கையாளுதல்.

(அ) He will do his work.
அவன் தன்னுடைய வேலையைச் செய்வான். (உடன்பாடு) - ஆண்பால்
(ஆ) He won't do his work.
அவன் தன்னுடைய வேலையைச் செய்யமாட்டான். (எதிர்மறை)
(அ) She will do her work.
அவள் தன்னுடைய வேலையைச் செய்வாள். (உடன்பாடு)-பெண்பால்.
(ஆ) She won't do her work.
அவள் தன்னுடைய வேலையைச் செய்யமாட்டாள். (எதிர்மறை)
(அ) It will do its work.
அது தன்னுடைய வேலையைச் செய்யும். (உடன்பாடு) ஒன்றன்பால்.
(ஆ) It won't do its work.
அது தன்னுடைய வேலையைச் செய்யாது. (எதிர்மறை)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்லஸ்




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.

# நேட்டோ மாநாடு



'நேட்டோ' அமைப்புக்களின் மாநாடு கடந்த சில தினங்களுக்கு முன்னர்ருமேனியாவின் 'புக்கரஸ்ட்' நகரில் நடைபெற்றது.

மூன்று தினங்களாக நடைபெற்ற இம்மாநாட்டின் நிறைவு நாளில் உரை நிகழ்த்திய ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், ஈரான் விடயத்தில் அமெரிக்கா மேற்கொண்டு வருகின்ற கொள்கையையிட்டு தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

'பனிப்போரை' முடிவிற்கு கொண்டு வருவதில் ரஷ்யா மேற்கொண்ட நடவடிக்கைகளை பாராட்டுவதற்கு மாறாக குறைத்து மதிப்பிடுவதையிட்டும் புட்டின் உறுப்பு நாடுகளை விமர்சித்தார்.

இதேவேளை, முன்னாள் சோவியத் ஒன்றியத்தினுள் அடங்கிய நாடுகளான ஜோர்ஜியா, உக்ரேன் ஆகிய நாடுகளுக்கு மேற்படி 'நேட்டோ' அமைப்பில் உறுப்புரிமை வழங்கப்படாமை குறித்து ரஷ்ய பத்திரிகைகள் 'நேட்டோ' நாடுகளைக் குறை கூறியிருந்தன.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார். புஷ்ஷின் ஜனாதிபதி ஆட்சிக்காலம் இந்த வருடத்துடன் முடிவடையவுள்ள நிலையில் அவர் கலந்து கொண்ட கடைசி 'நேட்டோ' மாநாடாக இது அமைந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# வென்றது யார்?

கடந்த மாதம் சிம்பாப்வே நாட்டில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் வாக்குகளை மீள எண்ணுமாறு ஜனாதிபதி ரொபேர்ட் முகாபேயின் கட்சி தேர்தல் ஆணையத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.




முகாபே கட்சியின் கருத்தின்படி மேற்படி தேர்தலில் இரண்டு பிரதான வேட்பாளர்களும் 50 வீதத்திற்கு மேற்பட்ட வாக்குகளை பெறாத நிலையில் மீண்டும் இரண்டு வேட்பாளர்களுக்கிடையே தேர்தலொன்றை நடத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளது.


மறுபடி தேர்தல் நடைபெறின் முகாபே நிச்சயமாக பெரும்பான்மை வாக்குகளுடன் வெற்றி பெறுவார் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், எதிர்க்கட்சித் தலைவரான மொர்ஷன் டிஸ்னிகிராய், தானே இத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளதாகவும், மறுதேர்தலொன்று நடைபெற்றால் முகாபேயின் ஆதரவாளர்கள் பலாத்காரத்தின் மூலம் வெற்றி பெற முயல்வார்கள் என்றும் எச்சரிக்கை செய்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகிய இரண்டு தேர்தல்களும் சமகாலத்திலேயே நடத்தப்பட்ட நிலையில் நாடாளுமன்றத் தேர்தலிலும் எதிர்கட்சியே வெற்றி பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# ஒஸ்கார் விருது பெற்றவரின் மறைவு







ஒஸ்கார் விருதுபெற்ற அமெரிக்காவின் பிரபல நடிகர் சார்ல்ட்டன் ஹெஸ்ட்டன் கடந்த சனிக்கிழமையன்று காலமானார். அவருக்கு வயது 84.

கலிபோர்னியாவின் பிவர்லி ஹில்ஸில் உள்ள தமது இல்லத்தில் மனைவி லிடியாவுடன் அவர் தமது அந்திய காலத்தில் வசித்து வந்தார்.

'பென்ஹர்' என்னும் உலகப் பிரசித்தி பெற்ற படத்தில் அவர் ஏற்று நடித்த பாத்திரத்துக்காக 1959 ஆம் ஆண்டு சிறந்த நடிகருக்கான 'ஒஸ்கார்' விருதை அவர் பெற்றுக் கொண்டார்.

உலகப் பிரசித்தி பெற்ற 'டென் கொமாண்ட்மென்ஸ்' (பத்துக்கட்டளைகள்), 'பென்ஹர்', விஞ்ஞானக் கற்பனைக் கதைப்படங்களான 'பிளனட் ஒப்த ஏப்ஸ்', 'சொஸ்லண்ட் கிரின்', வீரதீர படமான 'ஏர்குவேக், ஷேக்ஸ்பியர்' கதைப்படமான 'அந்தனி அன்ட் கிளியோ பாட்ரா' போன்ற படங்களிலும் இவர் தன் நடிப்புத்திறனை வெளிக்காட்டியமையும் குறிப்பிடத்தக்கது

உயர் கல்வி கற்ற போது மேடை நாடகங்களில் நடித்ததன் மூலம் பெயர் பெற்றதுடன் 'புலமைப் பரிசில்' மூலம் வடமேற்கு பல்கலைக்கழகத்துக்கு செல்லும் வாய்ப்பையும் இவர் பெற்றிருந்தார்.

## அற்லஸ் கேள்வி - 147

**கேள்வி:** ஸிம்பாப்வே நாட்டு நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற கட்சித் தலைவரின் பெயர் என்ன?

**சரியான விடை.......................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 147,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 145 இன் சரியான விடை: வியட்நாம்**


**பரிசு பெறுவோர்**

றிஸா உல் கரீம்,
92/1A, கலகெதர,பாதுக்கை.

என்.துர்ஷித்தா,
209/1, வெலியமுன வீதி,வத்தளை.

யதிகுலராஜா சயந்தன்,
கடுக்காமுனை, கொக்கட்டிச்சோலை,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயிர் கொடுத்து காப்போம்!

ஒருவரது பசியைப் போக்குவது அன்னதானம். ஒருவருக்கு பார்வை கொடுப்பது கண் தானம். அதேவேளை, ஒருவரது உயிரைக் காப்பாற்ற உதவுவது தான் 'இரத்த தானம்' (குருதிக் கொடை). ஒருவருக்காக ''நாம் உயிரை தருகிறோம்'' என்று கூறினாலும் அது சாத்தியப்படாது. மாறாக, அவருக்குத் தேவைப்படும் நேரத்தில் சிறிதளவு இரத்தத்தைக் கொடுத்து அவருடைய உயிரையே நாம் காப்பாற்றலாம். இரத்த தானத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் நோக்கில் ஒவ்வொரு வருடமும் ஜூன் 14 ஆம் திகதி 'உலக இரத்த தான' தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதியுபகாரம் எதிர்பார்க்காமல் முழுமனதோடு நாம் செய்யும் இரத்த தானம் நாம் ஒருவருக்கு வாழ்வு கொடுத்தது போலாகும். இரத்த தானம் பற்றி அநேகருக்குத் தெரிந்திருக்காது. அப்படியே தெரிந்திருந்தாலும் இரத்தம் கொடுப்பதைத் தங்களின் உடலில் ஓர் உறுப்பை வெட்டிக் கொடுப்பது போன்று எண்ணிக் கொள்கிறார்கள். இந்த எண்ணம் அவர்களது பயம், அறியாமையாகவும் இருக்கலாம்.

சாதாரண எடையுள்ள ஒவ்வொரு மனித உடம்பிலும் 56 லீற்றர் இரத்தம் இருக்கும். அதில் இருந்து 300-350 மில்லிலீற்றர் இரத்தம் மட்டுமே இரத்த தானத்தின்போது எடுக்கப்படுகின்றது. தானமாக கொடுக்கப்படுகின்ற இரத்த அளவை நமது உடல் 24-48 மணி நேரத்திற்குள் மீண்டும் உற்பத்தி செய்துவிடுகின்றது. உடலில் உள்ள ஒவ்வொரு இரத்த அணுவும் மூன்று மாத காலத்தில் தானாகவே அழிந்து மீண்டும் உற்பத்தியாகின்றது.இரத்த தானத்தின் போது நாம் இழக்கும் சிவப்பணுக்களின் எண்ணிக்கை 56 நாட்களிலேயே சீராகிவிடுகின்றது. இந்நிகழ்வு எப்போதும் நமது உடலில் நடந்துகொண்டிருக்கும் ஒரு படிமுறை.



எனவே, இரத்த தானம் செய்வதால் நம் உடலுக்கு எவ்வித பாதிப்போ பலவீனமோ ஏற்பட வாய்ப்பில்லை. இதனால், 3 மாதங்களுக்கு ஒரு முறை மட்டுமே இரத்த தானம் செய்யலாம். இரத்த தானம் அளிப்பதற்கு எந்தவித உணவுக்கட்டுப்பாடோ, மருந்தோ தேவையில்லை.



## எல்லோரும் இரத்த தானம் செய்யலாமா?

ஒவ்வொருவரும் தாம் விரும்பியபடி இரத்த தானம் செய்ய முன்வந்தாலும், குறித்த நபர் இரத்த தானம் கொடுப்பதற்குத் தகுதியானவரா என்பதைக் கட்டாயம் வைத்தியர்கள் பரிசோதிக்க வேண்டும். அவ்வாறு பரிசோதிக்காவிடில் இரத்தம் கொடுப்பவருக்கு ஏதாவது நோய்கள் இருப்பின் அவை இரத்தத்தின் மூலம் மற்றவருக்குத் தொற்றிக்கொள்ளும் வாய்ப்புகள் அதிகம் உண்டு.

குறிப்பாக இரத்த தானம் செய்பவர் தேகாரோக்கியமுள்ளவராக இருக்க வேண்டும். நீரிழிவு நோய், காசநோய், எயிட்ஸ், தொடர்ச்சியாக மருந்துகள் பாவிப்பவர், போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள். இதய நோய், சிறுநீரகம், நுரையீரல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், இரத்த அழுத்தம், ஆஸ்துமா, மலேரியா கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் கடந்த 3 வருடங்களுக்குள் மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் போன்றோர் இரத்த தானம் செய்வதற்குத் தகுதியற்றவர்கள் ஆவர்.

## கவனத்தில் கொள்ளவேண்டியவை....!

இரத்த தானம் அளிப்பதால் நமது உடலுக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை. இந்நிகழ்வு உடலுக்கு நன்மையாகவே இருக்கும். 18 வயதுக்கு மேல் உள்ளவர்கள் இரத்த தானம் செய்யலாம். அவர்களது உடல் எடை 45 கிலோவுக்கு குறையாமல் இருக்க வேண்டும். சுகதேகியான எந்த ஒரு நபரும் இரத்த தானம் செய்யலாம்.

பொதுவாக உடலில் இருந்து இரத்தம் எடுப்பதற்கு 5 அல்லது 10 நிமிடங்கள் வரை ஆகும். ஆனால், இரத்த தானத்தின் பின் 10, 15 நிமிடங்கள் கட்டாயம் சிறிது ஓய்வு எடுக்கவேண்டும். இரத்த தானத்தின் பின்னர் அவரவர் தங்களது அன்றாட வேலைகளில் ஈடுபடலாம். இதில் எவ்வித பிரச்சினையுமில்லை. அடிக்கடி இரத்த தானம் செய்பவர்களுக்கு இரத்த அழுத்தம் (Blood Pressure) ஏற்படும் வாய்ப்பு மிக மிகக் குறைவு என மருத்துவக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.



மேலும், இரத்த தானம் அளிக்கும் போது நம்மிடம் இருந்து இரத்தம் எடுக்கப்பயன்படும் ஊசிகள், மருத்துவப் பொருட்கள் புதிதானவையா என்பதை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

-உமா

---

FUNDAY TIMES

PEOPLE'S BANK THE PULSE OF THE PEOPLE

# அகில-இலங்கை கட்டுரைப் போட்டி

People's Bank Sisu Udana An outstanding future generation

## அனுசரணை:- மக்கள் வங்கி

மக்கள் வங்கியின் அனுசரணையுடன் நடத்தப்படும் 'விஜய்' அகில இலங்கை கட்டுரைப்போட்டியில் பங்குகொள்ள வருமாறு உங்களை வரவேற்கிறோம். இந்தப் போட்டியில் நாடெங்குமுள்ள நான்கு பிரிவு மாணவர்களும் பங்குபற்றலாம். கட்டுரைகள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் எந்த மொழியிலும் எழுதப்படலாம்.

### கட்டுரைக்கான தலைப்புக்கள் வருமாறு:

தரம் 2-3: 'எனது பாடசாலை' எனும் தலைப்பில் 10 வசனங்கள் (சுமார் 100 சொற்கள்)

தரம் 4-5: எனது நாடு (150 சொற்கள்)

தரம் 6-7: நமது சூழலை பாதுகாத்தல் (200 சொற்கள்)

தரம் 8-9: ஒற்றுமையே பலம்

### - கட்டுரைகள் அனுப்புவதற்கான முடிவுத் திகதி 18 மே 2008

கிடைக்கப்படும் கட்டுரைகளில் தமிழ், ஆங்கிலம், சிங்கள மொழி மூலம் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒவ்வொரு மாவட்டங்களிலிருந்தும்10 இறுதிப்போட்டியாளர்கள் தெரிவு செய்யப்படுவர். இறுதிக்கட்டப்போட்டி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்று வீதம் 25 நிலையங்களில் நடத்தப்படும்.

தெரிவு செய்யப்பட்ட இறுதிப்போட்டியாளர்கள் குறிப்பிட்ட திகதியன்று அருகிலுள்ள நிலையத்துக்கு வருமாறு கேட்கப்படுவார்கள். அன்றைய தினம் மாவட்ட நிலையங்களில் நடத்தப்படும் போட்டியின் போது கொடுக்கப்படும் புதிய தலைப்பில் குறிப்பிட்ட நேரத்துக்குள் கட்டுரைகள் எழுதி முடிக்கப்பட வேண்டும்.

மத்தியஸ்தர் குழுவொன்று அகில இலங்கை ரீதியிலான வெற்றியாளர்களை தெரிவு செய்யும். அவர்களின் முடிவே இறுதியானதாகும்.

### பரிசுகள்

பரிசுகள்: ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொரு மொழியிலும் ஐந்து பரிசுகள் வெற்றியாளர்களுக்கு வழங்கப்படும்.

முதலாவது இடம்: ரூபா 10,000 பணப்பரிசும், சிசு உதான கணக்குக்கு 5,000 ரூபாவும்.

2 ஆம் இடம்: ரூபா 7,000 பணப்பரிசும், சிசு உதான கணக்குக்கு 3,500 ரூபாவும்.

3 ஆம் இடம்: ரூபா 5,000 பணப்பரிசும் சிசு உதான கணக்குக்கு 2,500 ரூபாவும்.

4 ஆம் இடம்: ரூபா 3,000 பணப்பரிசும் சிசு உதான கணக்குக்கு 1500 ரூபாவும்.

5 ஆம் இடம்: ரூபா 2,000 பணப்பரிசும் சிசு உதான கணக்குக்கு 1,000 ரூபாவும்.

### மாவட்ட பரிசுகள்

மாவட்ட ரீதியில் ஒவ்வொரு வயதுப் பிரிவிலிருந்தும் ஒவ்வொரு மொழியிலிருந்தும் சிறந்த வெற்றியாளருக்கு ரூபா 1800 பரிசு.

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் முதல் மூன்று அகில இலங்கை ரீதியிலான வெற்றியாளர்களுக்கு வெற்றிச் சின்னங்கள் வழங்கப்படும்.

### நற்சான்றிதழ்கள்

அகில இலங்கை மற்றும் மாவட்ட ரீதியிலான வெற்றியாளர்களுக்கு நற்சான்றிதழ்கள் வழங்கப்படும்.

கூப்பனில் எல்லா முக்கிய விபரங்களையும் நிரப்பி கட்டுரையுடன் இணைத்து எமக்கு அனுப்பி வைக்கவும். மேற்படி, கட்டுரைகள் உங்களின் சுயமுயற்சியால் எழுதப்பட்டது என்பது பெற்றோரால் அல்லது ஆசிரியரால் உறுதிப் படுத்தப்படவேண்டும்.

### நிலையங்கள்

மாவட்ட நிலையங்கள் பற்றிய விபரம் காலக்கிரமத்தில் வெளியிடப்படும்.

FUNDAY TIMES அகில-இலங்கை கட்டுரைப் போட்டி விஜய்

பெயர் : ..............................

பிறந்த திகதி : ..............................

முகவரி : ..............................

..............................

தொலைபேசி : ..............................

பாடசாலை : ..............................

மாவட்டம் : ..............................

PEOPLE'S BANK THE PULSE OF THE PEOPLE People's Bank Sisu Udana

விஜய், கட்டுரைப் போட்டி
த.பெ.இல 2037,
கொழும்பு.

அல்லது

விஜய், கட்டுரைப் போட்டி
8, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு-02.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாய்மரப் படகு 13



'கலை அமுதன்' இக்பால்

## படகில் ஓட்டை

பேயலைகள் உலுக்கிய படகுக்கப்பல் இரண்டு நாள் ஓய்வின் பிற்பாடு அவ்விடத்திலிருந்து நகரத் தொடங்கியது.

அசைந்து சென்ற படகின் வெளிப்புற, அடிவாரத்திலே ஏதோ வித்தியாசமான ஓசை கேட்டது. கப்பல் நிறுத்தப்பட்டது. இரண்டு சுழியோடிகள், கப்பலின் அடிக்குச் சென்று பார்வையிட்டனர். கடல் நடுங்கியபோது, எழுந்து விழுந்த வேகத்தினாலே கப்பலின் கீழ்த்தளத்திலே இரண்டு மூன்று பலகைகள் வெடித்துக் கிளம்பியிருந்தன. சுழியோடிகள், உடைந்த பலகைகளைச் செப்பனிட முயன்றபோது, பலகைகள் கழன்று கையோடு வந்துவிட்டன. அந்தத் துவாரத்தினூடே கடல்நீர், கப்பலுக்குள் புகுந்து கொண்டது.

***கப்பல் கடலிலே மூழ்குமானால் கப்பலையும் அதிலுள்ளோரையும் நிச்சயமாக எவராலுமே காப்பாற்ற முடியாது. கடலிலே கப்பல் மூழ்கிவிடும் என்பது உறுதி. அப்படகுக் கப்பலிலே அவசரத்துக்குத் தப்பித்துக்கொள்ள உயிர்காக்கும் அவசர வள்ளங்கள் எதுவுமே கிடையாது. கப்பலிலுள்ளவர்களை இன்னுமொரு ஆபத்து சூழ்ந்துகொண்டது.***

கப்பலிலே அபாயமணி ஒலித்தது. சுழியோடிகள் இருவரும் உடைந்த ஓட்டையிலே தமது முதுகுகளை வைத்து அழுத்தி படகிற்குள் நீர் புகாதவண்ணம் முட்டுக் கொடுத்து ஓரளவிற்குத் தடுத்தனர். கப்பல் கடலிலே மூழ்குமானால் கப்பலையும் அதிலுள்ளோரையும் நிச்சயமாக எவராலுமே காப்பாற்ற முடியாது. கடலிலே கப்பல் மூழ்கிவிடும் என்பது உறுதி. அப்படகுக் கப்பலிலே அவசரத்துக்குத் தப்பித்துக்கொள்ள உயிர்காக்கும் அவசர வள்ளங்கள் எதுவுமே கிடையாது. கப்பலிலுள்ளவர்களை இன்னுமொரு ஆபத்து சூழ்ந்துகொண்டது.

கப்பல் பயணிகள் அனைவருமே உசார்படுத்தப்பட்டனர். கப்பலின் அடியிலே தண்ணீர் புகுந்ததால் பாரம் அதிகரித்தது. எனவே, அவசர அவசரமாக கீழ்த்தளத்திலே இருந்த யுத்தக்கைதிகள் அனைவருமே மேல்தளத்துக்குக் கொண்டுவரப்பட்டனர். இதனால், கப்பலின் அடிப் பாரம் ஓரளவுக்குக் குறைந்தது.

கப்பலிலிருந்து தண்ணீர் இறைக்கும் பம்புகள் இயக்கப்பட்டன. அடியிலே உட்புகுந்த நீர் அடைக்கப்பட்டது. இருப்பினும் வெளியேறும் நீரளவு தண்ணீர் பொத்தலினூடே உட்புகுந்தவண்ணமிருந்தது.

ஏற்பட்டுள்ள துன்பத்துக்கும் மேலாக போதாக்குறைக்கு கடல் மழை பெய்யத்தொடங்கியது. அதுவும் 'ஆலங்கட்டி' மழை, தலையிலே கல்லடிப்பது போன்று ஐஸ்கட்டிகள் பொத் பொத்தென்று விழுந்து கொண்டிருந்தன. மழையைப் பொருட்படுத்தாமல், கப்பலினுள்ளே விழுந்து கொண்டிருந்த ஐஸ்கட்டிகளை கைதிகள் சிரமத்தையும் வேதனையையும் பொருட்படுத்தாது அள்ளி இறைத்துக்கொண்டிருந்தனர்.

வேலைகள் முடிந்தநிலையில் இரவோடிரவாக உட்பகுதியில் தகடுகள் பொருத்தும் வேலை நடைபெற்றது. சுழியோடிகள் ஏதோவொருவகை மகிழ்ச்சிப் பிரவாகத்திலே குதூகலமாகக் காணப்பட்டனர்.

உடற்களைப்பையும் பொருட்படுத்தாது கண்விழித்திருந்து இரவோடிரவாக கப்பல் திருத்தப்பட்டு மறுநாள் காலை படகுக் கப்பல் பயணத்திற்குத் தயாரானது.

கப்பல் திருத்தப்பட்டதும் பயணிகள் முகத்திலே படர்ந்திருந்த சோகமுத்திரை விலகி ஏதோவொரு கிழட்டுத் தெம்புடன் வானத்தை நோக்கி கடவுளுக்கு வணக்கம் செலுத்தினர்.

இருப்பினும், திருத்தப்பட்ட படகுக் கப்பல் பாதுகாப்பாக கரை போய்ச்சேருமா என்ற அவநம்பிக்கையிலே தலைமை மாலுமி சின்வா ஆழ்ந்த சோகத்திலே விரக்தியுடன் காணப்பட்டாள். மறுநாள் கப்பல் பயணம் மீண்டும் ஆரம்பமாகியது.




(தொடரும்.....)

# வாய்மையே வெல்லும்

பாடசாலையில் அன்றன்று நடத்தப்பட்ட பாடங்களைப் பற்றி வீட்டுக்கு வரும்போது வகுப்புத் தோழன் அசோகனிடம் பேசியபடி வருவது சத்தியனின் வழக்கம்.

"அசோகா.... தமிழாசிரியர் நடத்திய அரிச்சந்திரன் கதையைப் பத்தி நீ என்ன நினைக்கிறே?"

"எனக்கென்னவோ அந்த அரிச்சந்திரன் கதை பிடிக்கலை" என்றான் அசோகன்.

"ஏன்?"

"யாராவது ஒரு பொய்சொல்லாமல் தவிர்ப்பதற்காக நாடு, நகரம், மனைவி, மக்களை எல்லாம் இழப்பார்களா?"

"எப்போதும் உண்மையே பேசணும் என்பதற்காக அப்படிச் செய்தார் அரிச்சந்திரன்"

"என்னாலயெல்லாம் பொய் சொல்லாம இருக்க முடியாதுடா..."

"அப்படி நீ பொய் சொன்னா ஒருநாள் இல்லாட்டி ஒருநாள் அது பெரும் சிக்கலை உண்டாக்கும். ஒரு பொய்யைக் காப்பதற்காக ஆயிரம் பொய்கள் சொல்ல வேண்டி வரும். அதனால், உண்மையே பேசப் பழகிக் கோடா"

"அடப்போடா... உண்மையைச் சொன்னா அப்பா, அம்மா கிட்ட அதிகமாக காசு வாங்க முடியுமா? ஹோட்டல், சினிமா, பார்க் என்று சந்தோஷமா சுத்த முடியுமா? உண்மைங்கிறதே எப்போதும் சரி வராது"

"நீ இப்போ சொல்ற பொய்களால ஒருநாள் வசமா மாட்டிக்கப் போறே"

"அதையுந் தான் பாப்போமே" அலட்சியமாகக் கூறினான் அசோகன்.



சில நாட்கள் கழிந்தன.

ஒருநாள் ஆங்கில ஆசிரியர், "எல்லோரும் ஆங்கில செய்முறைப் புத்தகம் வாங்கணும். ஆதனால, ஒவ்வொருத்தரும் ஐம்பது ரூபா கொண்டு வந்து வகுப்புத் தலைவன் சத்தியனிடம் கொடுங்கள்" என்றார். அடுத்த நாள் அசோகனைத் தவிர மற்ற அனைவரும் பணம் கொடுத்துவிட்டனர். அதைக் கூறி, ஆசிரியரிடம் பணத்தை ஒப்படைத்தான் சத்தியன்.

"அசோகா நீ ஏன் இன்னும் பணம் கொடுக்கல?" என்று கேட்டார் ஆசிரியர்.

"சேர். எங்க அப்பாகிட்டேயிருந்து ஐம்பது ரூபா காசு வாங்கிட்டு வந்து சத்தியன்கிட்ட கொடுத்துட்டேன். அதைத் தவிர என்கிட்ட வேற காசே இல்லை சேர்" என்றான் அசோகன்.

அதைக் கேட்ட சத்தியன் அதிர்ச்சி அடைந்தாலும், ஆசிரியரிடம் தன் நண்பனைக் குற்றஞ்சாட்ட விரும்பாமல், "சேர் நான்தான் மறந்துவிட்டேன். இதோ என்னிடம் பணம் இருக்கிறது" என்று தன் சட்டைப் பையில் வைத்திருந்த ஐம்பது ரூபாவை எடுத்து ஆசிரியரிடம் கொடுத்தான்.

தனது சாமர்த்தியத்தால் ஐம்பது ரூபா லாபம் என்று மனதுக்குள் மகிழ்ந்து கொண்டிருந்தான் அசோகன்.

இடைவேளைக்குப் பிறகு வகுப்பில் பரபரப்பு. அசோகனுக்கு அருகே அமர்ந்திருந்த மாணவன், தன் புத்தகத்தில் வைத்திருந்த ஐம்பது ரூபா நோட்டைக் காணவில்லை என்று ஆசிரியரிடம் கூறி அழுதான்.

உடனே ஆசிரியர் மாணவர்கள் எல்லோரையும் சோதனையிட, பேண்ட் பாக்கெட்டில் ஐம்பது ரூபா வைத்திருந்த அசோகன் மாட்டிக் கொண்டான்.

"உன்கிட்ட பணமில்லேன்னு சொன்னியே.. இப்போ இந்தப் பணம் எப்படி வந்துச்சு?"


அசோகனோ திருடனுக்குத் தேள் கொட்டியது போல திருதிருவென விழித்தான். பணத்துக்காக நண்பனைப் பற்றி பொய் கூறிய தனக்கு திருட்டுப் பட்டம் கிடைத்துவிட்டதே என்று வேதனைப்பட்டான். ஆசிரியரிடம் உண்மையைக் கூறிய அசோகன், இனி ஒருபோதும் பொய் சொல்வதில்லை, திருடுவதில்லை என்று அந்தக் கணமே முடிவெடுத்தான்.

உண்மையை மறைக்கலாம். ஆனால், ஒழித்துவிட முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக கிண்ணத்தை வெல்ல ஆசை

-டென்டுல்கர்



"அடுத்த உலகக் கிண்ணப் போட்டியிலும் விளையாடி இந்தியாவிற்கு உலகக் கிண்ணத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன்" இவ்வாறு இந்திய அணியின் சச்சின் டென்டுல்கர் பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

அடுத்த உலகக் கிண்ணம் 2011 ஆம் ஆண்டு நடைபெறவுள்ளது. இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இணைந்து இப்போட்டிகளை நடத்தவுள்ளன. எனவே, மேற்படி உலகக் கிண்ணத்தில் போட்டியிட்டு தனது உலகக் கிண்ணக் கனவை நனவாக்க விரும்புவதாக டென்டுல்கர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இது குறித்து அவர் தெரிவிக்கையில் கடந்த இருபது வருடங்களாக கிரிக்கெட் விளையாடி வருகின்றேன். எதிர்காலத்தை விட நிகழ்காலத்தையிட்டே நான் அதிக கவனம் செலுத்துவதுண்டு. மிகவும் ரசித்து பிரியத்துடன் கிரிக்கெட் விளையாடி வருகின்றேன். கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் கிரிக்கெட்டுடன் தொடர்புபட்டு ஏதோ ஒரு வகையில் எனது பங்களிப்பினை தொடர்ந்து வழங்குவேன்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# அக்தாரின் சர்ச்சை



பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஷொஹெப் அக்தாரின் சில கருத்துக்கள் பாகிஸ்தான் கிரிக்கெட் களத்தில் தொடர்ந்தும்பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தி வருகின்றது.

அக்தார் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையை விமர்சித்தமையால் அவருக்கு ஐந்து வருட போட்டித் தடை விதிக்கப்பட்டதையடுத்து, ஆத்திரமுற்ற அக்தார் இம்சமாம் மீதும் மொஹின் கான் மீதும் சில குற்றச்சாட்டுக்களை சுமத்தியதையடுத்து மேலும் சிக்கல் நிலை தோன்றியுள்ளது. கிரிக்கெட் சூதாட்டக்காரர்களின் ஒப்பந்தத்திற்கேற்ப போட்டிகளில் தோல்வியை அடையுமாறு, இம்சமாமும், மொஹின் கானும் தன்னைக் கேட்டுக் கொண்டதாக அக்தார் தெரிவித்ததையடுத்து பிரச்சினை மென்மேலும் பூதாகரமாக எழுந்துள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்திருக்கும் இம்சமாம் உல்ஹக் "அக்தார் வீண் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதாகவும் தன் மீதான குற்றங்களை மறைப்பதற்காக அவர் இவ்வாறு பேசுகின்றார்" என்றும் தெரிவித்துள்ள இம்சமாம், "பாகிஸ்தானின் முன்னாள் வீரர்கள் சிலர் அக்தாருக்கு சாதகமாக கருத்துத் தெரிவித்துள்ளனர். எனினும், அவர்கள் அக்தாருடன் ஒன்றாகப் போட்டியிட்டவர்கள் அல்ல, எனவே அக்தாரைப் பற்றி அவர்களுக்குத் தெரியாது" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அக்தாரின் குற்றச்சாட்டுக்களையிட்டு அவர் மீது வழக்குத் தொடரவுள்ளாராம் இம்சமாம்.




# டெஸ்ட் போட்டிகளை அதிகரிப்பது நல்லது



மேற்கிந்திய தீவுகள் இலங்கை அணிகளுக்கிடையே நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றி பெற்றதையடுத்து மேற்படி போட்டித் தொடர் 1-1 என்று சமநிலையில் முடிவுற்றமை நாம் அறிந்ததே.

இத்தொடரில் இரண்டு போட்டிகளுக்குப் பதிலாக மூன்று போட்டிகள்



இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று இரண்டு அணிகளினதும் தலைவர்கள் கூறியுள்ளனர்.

போட்டித் தொடரானது ஒற்றை இலக்கத்தில் இருந்தால் பலமான அணி எதுவென்பதை இனங்காண்பதற்கு வழியேற்படும். அதிலும் இரண்டு போட்டிகள் மாத்திரமே உள்ள போட்டித் தொடரில் முதலாவது போட்டியில் தோல்வி காணுகின்ற அணி அடுத்த போட்டிகளில் போட்டித் தொடரை சமப்படுத்த மாத்திரமே முடியுமே தவிர போட்டித் தொடரை வெல்வதற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விடுகின்றது. எனவே, இனிவரும் காலங்களிலாவது இரண்டிற்கும் மேற்பட்ட டெஸ்ட் போட்டிகளை சேர்ப்பது நல்லது என்றும் அவர்கள் மேலும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# தாமதித்த முடிவு...



இங்கிலாந்து அணியின் மார்க்ஸ் டிரெஸ்சோனிக் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளமை மிகவும் காலம் தாமதித்து எடுத்த முடிவாகும் என்று கிரிக்கெட் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

மார்க்ஸ் டிரெஸ்கோஸிக் இங்கிலாந்தின் சார்பாக 123 ஒருநாள் போட்டிகளிலும், 76 டெஸ்ட் போட்டிகளிலும் போட்டியிட்டுள்ளதுடன், ஒருநாள் போட்டிகளில் 4335 ஓட்டங்களையும், டெஸ்ட் போட்டிகளில் 5825 ஓட்டங்களையும் பெற்றுள்ளார். இவர் கடைசியாக 2006 ஆம் ஆண்டில் ஒகஸ்ட் மாதம் பாகிஸ்தான் அணியுடனான போட்டியிலேயே கலந்து கொண்டார். எனினும், அந்தப் போட்டிகளில் அவர் சரிவரத் தனது திறமைகளை வெளிப்படுத்தவில்லை. கடைசிப் போட்டிகளில் மொத்தமாக 135 ஓட்டங்களை மாத்திரமே இவர் பெற்றிருந்தார். இதன் காரணமாக அவருக்கு தொடர்ந்து அணிகளில் வாய்ப்பு வழங்கப்படவில்லை. எனினும், தனது கால் பாதத்தில் ஏற்பட்டுள்ள உபாதையின் காரணமாகவேதான் ஓய்வு பெறுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# செரினா வில்லியம்ஸின் வெற்றி

மியாமி டென்னிஸ் ஒற்றையர் பிரிவுப் போட்டியில் அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல வீராங்கனை செரினா வில்லியம்ஸ் செம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

அமெரிக்காவில் நடைபெற்ற மேற்படி செம்பியன் கிண்ணப் போட்டியில் செரினா வில்லியம்ஸை சேர்பிய நாட்டின் வீராங்கனை ஜெலினா எதிர்த்துப் போட்டியிட்டார்.

இப்போட்டியில் 6-1, 5-7, 6-3 என்ற கணக்கில் செரினா வில்லியம்ஸ் வெற்றியீட்டினார். செரினா வில்லியம்ஸ் இது ஐந்தாவது தடவையாகப் பெறுகின்ற செம்பியன் பட்டமாகும்.

இதற்கு முன்னர் 2002 ஆம், 2003 ஆம், 2004 ஆம், 2007 ஆம் ஆண்டுகளில் இவர் செம்பியன் பட்டத்தை வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் மற்றொரு டென்னிஸ் வீராங்கனையான ஸ்டெ·ஃபி கிரா·ஃபும் ஐந்து தடவைகள் செம்பியன் பட்டத்தை வென்றிருந்தார். தற்போதைய வெற்றியின் மூலம் அந்த சாதனையை செரினா வில்லியம்ஸ் சமன் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் உயரமான நீர்வீழ்ச்சி ‘ஏஞ்சல்’

‘கெரெபாகுபாய் மெரு’ எனும் சுதேச பெயர் பெற்ற உலகின் அதி உயரத்திலிருந்து பாயும் நீர்வீழ்ச்சியே ஏஞ்சல் ஆகும். இதன் உயரம் 979m (3,212 அடி). இதுவே உலகின் அதிஉயரம் கூடிய நீர்வீழ்ச்சியாகவும் கொள்ளப்படுகின்றது. வெனிசுவெலாவின் பொலிவர் மாநிலத்தில் கிரேன் ஸபானா வலயத்தில் கனைமா தேசிய பூங்காவிலேயே இந்நீர்வீழ்ச்சி ஆரம்பிக்கின்றது. அதிஉயரத்திலிருந்து கீழ்நோக்கி ஏஞ்சல் பாயும்போது அதன் நீரானது இப்பகுதியில் வீசும் பலத்த காற்றினால் பனித்துளிகளாக உருமாற்றம் பெற்றே நிலத்தை வந்தடைகின்றது.

ஏஞ்சல் நீர்வீழ்ச்சி உற்பத்தியாகுமிடத்திலிருந்து கெரெப், கொர்ரோ மற்றும் ‘சுர்குன்’ போன்ற ஆறுகள் நீரைப் பெறுகின்றன. ஏஞ்சலானது வெனிசுவெலாவின் தேசிய மொழிகளில் ஒன்றான ‘பெமன்’ மொழியில் ‘கெரெபாகுபாய் மெரு’ என்றழைக்கப்படுகின்றது. ‘உயரமான இடத்தின் நீர்வீழ்ச்சி’ என்பதே இதன் பொருளாகும்.

இந்நீர்வீழ்ச்சி உற்பத்தியாகின்ற தட்டையான மேற்பரப்பைக் கொண்ட ‘தெபுய்’ மலையை பெமன் இந்தியர்கள் ‘ஓயன் தெபுய்’ அல்லது ‘ஐயன் தெபுய்’ என அழைக்கின்றனர். இது ‘பேயின் இல்லம்’ அல்லது ‘பேயின் மலை’ என்று அர்த்தப்படுகின்றது.



தெபுய் மலையில் வசிக்கும் ‘பெமன்’ இந்தியக் குடிகள்



‘எல் ரியோ க்ரோனி’ எனும் சிறு விமானம்

ஏஞ்சல் நீர்வீழ்ச்சியானது, வோல்டர் ரெலி என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எனினும், 1910 இல் வெனிசுவெலா ஆராய்ச்சியாளரான ‘ஏரினெஸ்டோ ஸன்செஸ் லா க்ருஸ்’ என்பவர் இதனைக் கண்டுபிடித்தாராயினும் அவர் இதனைப் பிரச்சாரப்படுத்தவில்லை. இருப்பினும் ‘ஜிம்மி’ என்ற, ஜேம்ஸ் க்ராவ்பார்ட் ஏஞ்சல்’ எனும் அமெரிக்க விமான ஓட்டி 1933 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி பெறுமதிமிக்க ஓர் உலோக தாதுப்படிமத்தைத் தேடி இந்நீர்வீழ்ச்சிக்கு மேலாக விமானத்தில் பறக்கும் வரையில் இந்நீர்வீழ்ச்சி பற்றி மக்கள் அறிந்திருக்கவில்லை.

தமது தேடுதலை நிறைவு செய்துவிட்டு 1937 ஒக்டோபர் 9 ஆம் திகதி ஏஞ்சல், அவரது மனைவி உட்பட 3 சகாக்களுடனும் திரும்பி வருகையில் ஓயன் தெபுய்யில் ‘எல் ரியோ க்ரோனி’ எனும் சிறு விமானத்தை தரையிறக்கும்போது நீர்வீழ்ச்சியின் சதுப்பு நிலப் பரப்பில் விமானத்தின் சில்லுகள் உள் இறங்கின. இதனால், இவர்கள் இச்சிறு விமானத்திலிருந்து வெளியிறங்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கப்பட்டனர். அங்கிருந்து மக்கள் வாழும் பிரதேசத்தை அடைய அவர்களுக்கு மொத்தம் பதினொரு நாட்கள் எடுத்தன. இருப்பினும் இவர்கள் முகம் கொடுத்த சம்பவம் மக்கள் மத்தியில் பரவி அவர்களுக்குப் புகழை ஈட்டித் தந்ததோடு அன்றிலிருந்து இந்த நீர்வீழ்ச்சி ‘ஏஞ்சல் நீர்வீழ்ச்சி’ என அழைக்கப்படலாயிற்று.

சதுப்பு நிலத்தில் தரையிறங்கிய ஏஞ்சலின் விமானம் ஒரு ஹெலிகொப்டரினால் கீழிறக்கப்படும்வரை 33 வருடங்களாக தெபுய் மலை உச்சியிலேயே இருந்தது. பின்னர் அது மரகேய்யிலுள்ள விமான நூதனசாலையில் வைக்கப்பட்டு தற்போது சியுடட் பொலிவர் விமானநிலையத்தின் வெளியே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த சம்பவத்தை ஞாபகப்படுத்துமுகமாக ஏஞ்சலின் விமானத்தை ஒத்த போலி விமானமொன்றும் தற்போது ‘தெபுய்’ மலையுச்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட சான்றுகளின்படி, ஏஞ்சல் நீர்வீழ்ச்சிக்கு நீரை வழங்கும் ஆற்றை அடைந்த முதல் மனிதன் ‘லத்விய’ ஆராய்ச்சியாளரான அலெக்ஸாண்டர் லேம் என்பவராவார். இவர் ஓயன் தெபுய்யை 1955 இல் வந்தடைந்தார். 18 வருடங்கள் தொடர்ந்த இப்பயணத்தின்போது அவர் ஏஞ்சலின் விமானத்தையும் அடையக்கூடியதாக இருந்தது.



ஏஞ்சல் நீர்வீழ்ச்சியைக் கண்டுபிடித்த ‘ஜிம்மி’ என்ற, ஜேம்ஸ் க்ராவ்பார்ட் ஏஞ்சல்’

1949 இல் அமெரிக்கப் பத்திரிகையாளரான ருத் ரொபர்ட்ஸனின் தலைமையிலான தேசிய புவியியல் மன்றத்தினால் இந்நீர்வீழ்ச்சியின் உயரம் 979 மீற்றர் (3,212 அடி) எனக் கணிப்பிடப்பட்டது. இதன் துளி ஒன்றின் நீளம் 807 மீற்றர் (2,648 அடி) ஆகும். ஆகவே, அன்றிலிருந்து உலகின் மிக உயரமான நீர்வீழ்ச்சி என்ற பெருமையை ஏஞ்சல் தன்வசம் நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. ஏஞ்சல் நீர்வீழ்ச்சியானது, வெனிசுவெலாவின் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் ஒரு முக்கிய பிரதேசமாயினும் இன்றும்கூட இந்நீர்வீழ்ச்சியை அடைவதென்பது ஒரு எளிதான காரியமல்ல. இது வெனிசுவெலாவின் தனிமையானதொரு காட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ளது.

முகில்கள் சூழ்ந்த நாட்களில் இந்நீர்வீழ்ச்சி தென்படாது. நீர்வீழ்ச்சியிலிருந்து நீரைப்பெறுகின்ற ஆறுகளில் ஆற்றுப் பயணங்கள் மேற்கொள்ளப்படுகின்றபோதும் ஜூன் முதல் டிசம்பர் வரையான காலப் பகுதிகளிலேயே ஆற்றுப்பயணங்களை செய்யலாம். அத்துடன், பெமன் இந்தியர்களால் பயன்படுத்தப்படும் ஒரு வகை மரத்தோணிகளில் மாத்திரமே இவ் ஆற்றுப்பயணங்களை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளன.

எஃப். ஃபர்ஹா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 149 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி: 01 | போட்டி: 02 | போட்டி: 03 | போட்டி: 04 | போட்டி: 05 (குறு.போ-160) |
|---|---|---|---|---|
| கே.மஹாராஜ், தரம் - 10, | நஜாத் அமீர், தரம் - $7^{A}$, | எஸ்.நஸீஹா, தரம் - 5, | உ.பிரதீஸ், தரம் - $7^{C}$, | ம.லிரோஷினி, தரம் - 8, |
| கு/அந்நூர் மத்திய கல்., பாணகமுவ. | ஹ/அல்-மின்ஹாஜ் தே.பா., வீரகெட்டிய. | தி/அல்-ஹிரா ம.வித்., கிண்ணியா-03. | தி/உவர்மலை விவேகானந்தா கல்., திருகோணமலை. | புனித பத்திரிசியார் பா.,தலவாக்கலை. |

### (A) சரியான விடையில் கோடிடுக

1. சீனாவில் பேசப்படும் மொழி;
   a) பாளி b) மெண்டரின் c) டுபி d) ஜாங்ஜி
2. காங்கேசன்துறையின் புராதன பெயர்;
   a) ஜம்புகோளப்பட்டினம் b) ஜம்புதெனிய c) கல்யாணி
   d) கங்காசிபுரி
3. ஐஞ்சிறு காப்பியங்களும்;
   a) சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, மணிமேகலை, சிலப்பதிகாரம்.
   b) சூளாமணி, நீலகேசி, நாககுமார காவியம், உதயனின் கதை, யசோதர காவியம்.
   c) புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறந்தொகை,பரிபாடல்.
   d) சூளாமணி, வளையாபதி, ஐங்குறுநூறு, நீலகேசி, மணிமேகலை.
4. 'ரிச்டர்' அளவுத்திட்டம்;
   a) சுனாமி அலைவீச்சைக் கணக்கிடும்.
   b) மழைவீழ்ச்சியை அளவிடும்.
   c) காலநிலை மாறுபடுவதை எதிர்வுகூறும்.
   d) பூமி அதிர்ச்சியை அளவிடப் பயன்படும்.

### ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக

1








**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2008.04.23 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 152
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

### (B) பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக

3

| | | |
|---|---|---|
| 1. bet | - ...................... | உமி |
| 2. bat | - ...................... | கடதாசி |
| 3. metal | - ...................... | உலோகம் |
| 4. medal | - ...................... | பந்தயம் |
| 5. bran | - ...................... | மூளை |
| 6. brain | - ...................... | மிளகு |
| 7. paper | - ...................... | பதக்கம் |
| 8. pepper | - ...................... | வெளவால் |

### அறிவுக்கு விருந்து -149 விடைகள்

**போட்டி: 01**
a) 67 தேங்காய்கள் c) $27^{1/2}$ தேங்காய்கள்
b) 18.00 ரூபாய் d) 450.00 ரூபாய்

**போட்டி: 02**

| (A) | (B) |
|---|---|
| 1. ஒருத்தி | 1. சென்றார்கள் |
| 2. பெண்டிர் | 2. நீர் |
| 3. அஞ்ஞானம் | 3. விளையாடினான் |
| 4. போதகம் | 4. மூடப்பட்டிருக்கும் |
| 5. சீமான் | |

**போட்டி: 03**
(A)
(அ) tie (ஈ) grasshopper
(ஆ) curtain (உ) brinjal
(இ) broom (ஊ) banyan tree

**போட்டி: 04**
தேசிய நூதனசாலை

### கணக்குப் புதிர்

2

* ஒவ்வொன்றும் 400g நிறையுடைய 30 தேயிலை பெக்கட்கள் 6kg நிறையுடைய ஒரு பெட்டியில் அடைக்கப்படுகின்றன. தற்போது பெட்டியின் நிறை;
  (1) 40 (2) 30 (3) 12 (4) 29

** ஒரு பெட்டியில் 120 மாம்பழங்கள் உள்ளன. ஒவ்வொரு டசினிலும் 8 பழங்கள் நல்லவை. ஆகவே;
  a) நல்ல பழங்கள் மொத்தம் எத்தனை உள்ளன? ..............................
  b) பெட்டியில் மொத்தம் எத்தனை பழங்கள் அழுகியுள்ளன? ..............................

*** சுந்தரன் தனது மாமா வீட்டுக்குச் செல்லும் நோக்கில் புறக்கோட்டையிலிருந்து கண்டிக்குச் செல்லவுள்ள புகையிரதத்தில் ஏறி அமர்ந்தார். பிற்பகல் 03.00 மணிக்குப் புறப்பட்ட புகையிரதம் மாலை 07.00 மணியளவில் கண்டியைச் சென்றடைந்தது. அங்கிருந்து இரவு 8.00 மணியளவில் பஸ்ஸில் ஏறி 8km தூரத்திலுள்ள அவரது மாமா வீட்டுக்கு 08.45 மணியளவில் சென்றடைந்தார்.
  a) சுந்தரன் புகையிரதத்தில் எத்தனை மணித்தியாலங்கள் பிரயாணம் செய்தார்? ..............................
  b) சுந்தரன் பஸ்ஸில் ஏறி மாமா வீட்டைச் சென்றடைய எவ்வளவு நேரம் எடுத்தது? ..............................
  c) கண்டியிலிருந்து மாமா வீட்டுக்கு எவ்வளவு தூரம் இருந்தது? ..............................

### (A) மறைந்திருக்கும் பென்டாவை அடையாளப்படுத்துங்கள்.




### (B) இவ்விரு உருக்களும் ஒரே அளவுடையனவா?



### குறுக்கெழுத்துப் போட்டி இல.163

5




**மேலிருந்து கீழ்**

01. இலங்கையின் பிரதான பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அமைந்துள்ள இடம்.
02. கிறிஸ்தவ மதகுருமார்களை இவ்வாறு அழைப்பர்.
03. வாக்கியத்தில் செயலைக் குறித்து காலம் காட்டி நிற்கும் பயனிலைச் சொல் இவ்வாறு அழைக்கப்படும்.
05. கவிதை என்றும் அர்த்தப்படுத்தலாம்.
06. அரசன்-ஒத்தகருத்துச் சொல்.
09. நீர்நிலையொன்று. (தலைகீழ்)

**இடமிருந்து வலம்**

01. தனி நபரொருவருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அல்லது பஞ்சம், குறை முதலானவை நீங்க வேண்டி வைக்கோல் போன்றவற்றினால் செய்து எரிக்கப்படும் உருவம்.
04. .............. விதைத்தவன் ................ அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பது பழமொழி.
05. யானை-ஒத்தகருத்துச் சொல்.
07. சூரியத்தொகுதியில் பெரிய கோள்.
08. எதிரி-ஒத்தகருத்துச் சொல்.
10. உயரமான இடத்தை ஏறி அடைவதற்கு உதவும் சாதனம்.
11. மருத்துவக் குணம் மிக்கது; கெட்டுப்போகாதது.

### குறுக்கெழுத்துப்போட்டி 160 விடைகள்

**மேலிருந்து கீழ்**
01. ஈசான மூலை 04. கம்பன்
02. சகா 08. கோவில்
03. வயல் (குழம்பி) 09. நொடி

**இடமிருந்து வலம்**
01. ஈசல் 06. பனி 10. நுதல்
04. கண் 07. மூசு
05. சாகாவரம் 08. கோன்

குறுக்கெழுத்துப் போட்டி -163
"விஜய்" த.பெ.எண். 2037
கொழும்பு

### பாராட்டுப் பெறுவோர்

ஏ.சறூஸ், தரம் - $8^{A}$,
அஸ்-ஸிராஜ் ம.வித்., அம்பாறை.

சு.லக்ஷன், தரம் - $5^{A}$,
யா/கொக்குவில் இ.க., யாழ்ப்பாணம்.

எஃப்.ஆகிலா,
அலவியா மு.வித்.,பாணந்துறை.

### அன்பு மாணவர்களே!

இது உங்கள் கவனத்திற்கு.....

இனிவரும் போட்டிகளுக்கான விடைகளை நீங்கள் தபாலட்டையில் ஒட்டி எமக்கு அனுப்பி வையுங்கள். விடைகளை அனுப்பும் போது தவறாமல் உங்கள் பெயர், முகவரி, கல்வி கற்கும் தரம், பாடசாலையின் பெயர், அதன் முகவரி, வசிக்கும் நகரம், மாவட்டம் என்பனவற்றையும் எழுதி அனுப்புங்கள். அவை போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை காலதாமதமின்றி சேர்ப்பதற்கு பெரும் துணையாக அமையும். அத்துடன், நீங்கள் உங்களுக்கு விரும்பிய எந்தவொரு போட்டியிலும் கலந்து கொள்ளலாம் என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பெண்களே இல்லாத இடம்

கிறீஸ் நாட்டின் வடக்கே 'ஏதோஸ்' என்றொரு இடம் உண்டு. 'ஏதோஸ்' என்பது ஒரு மலையின் பெயராகும். இது 'புனித மலை' என்ற பெயராலும் அழைக்கப்படுகின்றது. சுமார் 335.637 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பைக் கொண்ட ஏதோஸ், செங்குத்தான மலைப்பாங்குடன் கூடிய அடர்த்தியான காடுகளையும் சுற்றிவரக் கொண்டு அமைந்துள்ளது.

ஏதோஸ் மலையை படகில் தான் சென்றடைய முடியும். கிழக்கு ஒதோடொக்ஸ் கிறிஸ்தவ தேவாலயத்தில் அங்கத்துவம் பெற்ற 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் மாத்திரமே இங்கு நுழைய அனுமதிக்கப்படுவர். 'தூய்மையானவர்களின் தோட்டம்' என்ற சிறப்புப்பெயர் கொண்டழைக்கப்படுகின்ற இப்புனித மலையில் 11 ஆம் நூற்றாண்டிலிருந்து துறவிகள் மட்டுமே வாழ்ந்து



வருகின்றனர். பெண்களுக்கு இங்கு நுழைவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இங்கு வாழ்ந்த துறவிகளில் 'மிகையிலே டொலோட்ஸ்' என்பவர் தன் வாழ்நாளில் ஒரு பெண்ணைக் கூடப் பார்க்காமல் இறந்துவிட்டார். இவர் பிறந்த அன்றே தன் தாயை இழந்துள்ளார். அதே தினத்தில் 'மிகையிலே டொலோட்ஸ்' இங்கு கொண்டுவரப்பட்டுள்ளார். அன்றிலிருந்து வெளியே எங்கும் செல்லாமல் வளர்ந்த இந்த துறவிக்கு தனது வாழ்நாட்களில் ஒரு நாளேனும் பெண்களைக் காண்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவேயில்லையாம்.

## வரலாற்றிலிருந்து..

# தோன கத்தரினாவின் முடிவு



**1.** நோய்வாய்ப்பட்டு காலம் கழித்த அரசி தோன கத்தரினா மரணமடைந்தாள். ஒரு கிறிஸ்தவப் பெண்ணாகவே உயிர் நீத்தாள். அவள் கண்டியிலிருந்தாலும் தனது கிறிஸ்தவ மதநெறியை கைவிடவில்லை. அவளின் மரணத்தின் பின் விமலதர்ம சூரியன் மூலம் பிறந்த அவளின் இரு மகள்மார்கள் இருந்தனர்.

**2.** ஒரு மகள் அரச மாளிகையில் இருந்து தப்பி ஓடினாள். எனினும், அவளின் திட்டம் நிறைவேறவில்லை. பிடிபட்டாள். மீண்டும் அரச மாளிகைக்கு கொண்டுவரப்பட்டாள். மன்னன் செனரத் அவர்கள் இருவரையும் அரசிகளாக்கினான். இவ்வேளையில் கொழும்பின் தளபதியாக கடமையாற்றிய தொன் பிரான்சிஸ்கோ மெனேசன் என்பவன் அசவேதுவைப் போல் கண்டியை ஆக்கிரமிக்கச் சென்றான்.

**3.** யுத்தத்தில் தோல்வி அடைந்தான். ஒருவாறாக உயிரைக் காப்பாற்றிக் கொண்டு கொழும்புக்கு வந்தான். இவ்வேளையில் செனரத் மன்னன் 'பலன' கோட்டையில் உள்ள 'லஸ் கிரிஞ்ஞா' சேனையுடன் தமது பொக்குவரின் கீழ் இருந்த படை அணியின்-உதவியும் கிடைத்தது. இவ் அனைத்து சேனைகளையும் ஒன்று சேர்த்துக் கொண்டு 'பலன' கோட்டை மீது தாக்குதல் நடத்தினான்.

**4.** இச்செய்தி கொழும்புக்கு எட்டியது. பிரான்சிஸ்கோ மெனேசஸ் படையுடன் பலனைக்குச் சென்றான். யுத்தம் புரிந்தான். கோட்டையை பாதுகாத்தான். அதைச் சூழ இருந்த கிராமங்களை அழித்தான். இவ்வேளை மெனேசஸ்க்கு எதிராக குற்றச்சாட்டுகள் எழுந்தன. கோவாவின் பதிலரசன் அவனைப் பதவியில் இருந்து இறக்கினான். மனுவேல் மஸ்கரஞ்ஞாஸ் ஹோமெம் என்பவனைத் தளபதியாக நியமித்தான்

**5.** அரசியல் ஊழல்களைக் களைதல், சேனைகளில் உள்ள தவறுகளை தேடிக் கண்டு பிடித்து அதனைச் சரியான ஒழுங்கமைப்பிற்குக் கொண்டு வருதல் மக்களின் துயரங்களை இனங்கண்டு அதற்குரிய தீர்வுகளை எடுத்தல் என்பன அவனுக்கு ஒப்படைக்கப்பட்ட முக்கிய பொறுப்புக்களாகும். மேலும், அவனுக்குப் போர் புரிவதற்கான அறிவுரைகளையும் கோவாவின் பதிலரசன் வழங்கினான்.

**6.** தளபதி மல்வானையில் குடியேற வேண்டும். எல்லா வருடங்களிலும் மலையகத்தைச் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்த வேண்டும். ஈவு இரக்கமின்றி அதனைச் செய்ய வேண்டும். கிராமங்களை அழித்தொழிக்க வேண்டும். மட்டக்களப்பு, கொட்டியாரம், திருகோணமலை, கொழும்புத்துறை ஆகிய துறைமுகங்கள் ஊடாக கண்டியுடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதை நிறுத்த வேண்டும்.

**7.** முழு நாட்டினதும் கறுவா வர்த்தகத்தின் ஏக போக உரிமையை தாமே பெறவேண்டும். மேற்குறித்த அனைத்து எச்சரிக்கைகளையும் அறிவுரைகளையும் பெற்றுக் கொண்டு அவன் இலங்கைக்கு வந்தான். அவன் வந்தது கி.பி 1614 இல் அவன் இலங்கைக்கு வந்தவுடனேயே செயலில் இறங்கினான். சைமன் கொரயாவை ஏழு கோறளைக்கு அதிபதியாக்கினான்.



**8.** லுவீ கோமஸ் பின்து என்பவனை நான்கு கோறளைக்கும் லுவீ கப்ரால் ஜேரிபா என்பவனை சப்ரகமுவைக்கும், துமின்கோ கர்வாலோ என்பவனை மாத்தறைக்கும் அரச அதிபர்களாக நியமித்தான்.

எழுதுபவர்: திலகன்
சித்திரம் : அபயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'டைட்டானிக்' கப்பலில் 'மார்க்கோனி'யின் வானலைக் கருவி

வானொலியை கண்டுபிடித்தவரான மார்க்கோனியின் முழுப் பெயர் குக்லி எல்மோ மார்க்கோனி என்பதாகும். 1864 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி பிறந்த மார்கோனி தனது முதலாவது ஆராய்ச்சியினை இத்தாலியில் மேற்கொண்டபோது மிகவும் குறுகிய தூர வான் அலைகளை உருவாக்குவதில் கூடிய கவனத்தை செலுத்தியிருந்தார். அவரது அந்த முயற்சி வெற்றி பெற்றதையடுத்து, நாளடைவில் அதனை மேலும் விரிவு படுத்தி கப்பல்களுடன் வானலைவழியே தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளக்கூடியவாறு அவரது கண்டு பிடிப்பில் மற்றுமொருபடி முன்னேற்றம் கண்டார். இதன் காரணமாக இவரது கண்டுபிடிப்பான தொலைதூர தொடர்புகளை ஏற்படுத்தவல்ல வானலைக் கருவிகள் தொடர்ச்சியாக கப்பல்களில் பயன்படுத்தப் பட்டன.



1912 ஆம் ஆண்டு அட்லாண்டிக் சமுத்திரத்தில் மூழ்கிய 'டைட்டானிக்' கப்பலில் கூட மார்க்கோனியின் இந்த தொலைத்தொடர்புக் கருவியே பொருத்தப்பட்டிருந்தது.

டைட்டானிக் கப்பலுக்கு நேர்ந்த அனர்த்தத்தின்போது 'மார்க்கோனி'யின் மேற்படி கண்டு பிடிப்பான தொலைத்தொடர்பு கருவியின் மூலம் அவசர தகவல்கள் அனுப்பப்பட்டமையால் கப்பலிலிருந்த 750 பேரைக் காப்பாற்ற முடிந்ததாகவும் கூறப்படுகின்றது. இத்துடன் 1889 ஆம் ஆண்டில் பிரிட்டன் அரசாங்கத்தினால் உலகிலேயே முதலாவது வானொலி ஒலிபரப்பு நிலையம் நிறுவப்பட்டது. மார்க்கோனிக்கு 1909 ஆம் ஆண்டில் 'நொபெல்' பரிசும் வழங்கப்பட்டது.

இத்தகைய அரிய கண்டுபிடிப்பினைக் கண்டு பிடித்த மார்க்கோனி 1937 ஆம் ஆண்டு மரண மடைந்தார். எனினும் அவரது கண்டுபிடிப்பான வானொலி மூலம், வானலைகளில் நாளாந்தம் அவர் பவனி வந்துகொண்டுதான் இருக்கின்றார்.








இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2008, ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday April 16, 2008.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org